வைத்திய கலாநிதி

THE VAIDYA KALANIDHI

EDITOR
Pandit M. Duraiswami Aiyangar,
Ayurveda Bhushan.

பத்திராதிபர்
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்
ஆயுர்வேத பூஷண

புஸ்தகம் 1. Vol. 1. — ஆனந்த வருஷ ஆடி மீ —AUGUST—1914. — ஸஞ்சிகை 12. No. 12.

THE ACTION OF SUN LIGHT ON SOME DISEASES.

சில வியாதிகளைப் போக்க சூரிய கிரணங்களுக்குள்ள சக்தி.

BY

Dr. J. V. RAMASWAMI NAIDU, L. M. & S.,
Physician and Surgeon.

பூமிக்கு ஸத்துவமுண்டு பண்ணுவதில் சூரி யன் மூலாதாரமெனக் கூறவேண்டும். சூரிய கிரணங்களாலேயே செடிகளும், ஜந்துக்களும், மனிதரும் ஜீவிக்கமுடியும். சூரியன் பூமியை யும் ஆகாயம் அல்லது வாயுவையும் உஷ்ண மாகச் செய்வதாலேயே காற்று வீசுவது, மழை பொழிவது என்னும் இயற்கைக் காரி யங்கள் நடைபெறுகின்றன. சூரியகிரணங் கள் தேஹத்திலுண்டாகிற வியாதிகளையும் சில வழிகளில் போக்குகின்றன. இவை பிணியுண் டாக்கும் நுண்ணுயிர்களை அழித்துப் பிராணி களுக்கு ஆரோக்கிய முண்டுபண்ணும். க்ஷய ரோகிகள் உமிழ்ந்துவிடும் எச்சில் முதலான வற்றி[illegible] ஸூக்ஷ்மக்கிருமிகளை இரண் டொரு [illegible]களில் [illegible]க்கச் செய்யுங் குணம் [illegible] மூலவர்க்கங்களு [illegible]விக்கு[illegible]த்துவத்தைத் தெரிந்து [illegible] ஆச்சரியகரமான விஷயமாயிருக் [illegible]பதன்[illegible] தருணத்திலுள்ள [illegible]கள், மற்ற[illegible]லைகள் முதலிய வற்றை மீண்டும் கிளைக்கச் செய்பவை சூரிய கிரணங்களே. இது உண்மையில் புனர்ஜீவ நமேயாம். சூரியனுடைய சக்தியினாலேயே கோதுமை, நெல் முதலிய தானியங்கள் பூமி யின் மேற் புறங்களைக் கீண்டு முளைகளா யெழும்பி வருகின்றன. மனிதர்கள் வெயிலை வேண்டியவளவு உபயோகித்துக் கொள்ளாவிடி னும் விருக்ஷவர்க்கங்கள் மிகுதியாக அதை உபயோகித்துக் கொள்வதியல்பு.

சூரியகிரணங்களை அவற்றின் குணங்களின் படிக்கு உஷ்ண கிரணங்களென்றும், இரஸா யந கிரணங்களென்றும், ஜோதிக்கிரணங்க ளென்றும் மூன்று விதங்களாகப் பிரிக்கலாம். இவற்றுள் உஷ்ணகிரணங்கள் பூமிக்குச் சூட்டை யுண்டுபண்ணும். இரஸாயநகிரணங் கள் செடிகளுக்கும், புஷ்பங்களுக்கும், பழங் களுக்கும் அவ்வவற்றிற் கேற்ற நிறங்களையும் வாஸனைகளையும் கொடுத்து அவற்றை அழ காகச் செழிக்கச் செய்யும். இந்த இரஸாயந கிரணங்களே நமது சர்மத்திற்கும் நிறமுண்டு பண்ணி அதைப் பதன்படுத்தி வைத்திருக்கும். சூரிய வெளிச்சம் இல்லாவிட்டால் செடிகள் பிணியுண்டவைபோல் காணப்படும். அன்றியும் ஹரிதம் அல்லது க்ளோரோபைல் (Chlorophil) என்னும் பசுநிறம் அவற்றிற்குண்டா காது. சூரியனில்லாமற் போனால் மனிதருடைய இரத்தத்திலுள்ள சோணிதம் (ஹிமொ க்ளோ

பின்-Hemoglobin) என்னும் நிறப்பொருள் சிதழிந்து முகம் வெண்ணிறமாகப் போய் ஆரோக்கியக்குறைவு நேரிடும்.

எக்ஸ்ரேஸ் (Xrays), பின்ஸென் லைட் (Fin-sun light) என்னும் பொறிகள் கண்டு பிடிக்கப்பட்டு சொற்பநாட்களே ஆயின. இவற்றைத் தோலைப்பற்றிய வியாதிகளில் இப்பொழுது உபயோகித்து வருகின்றனர். பின்ஸென் லைட், எக்ஸ்ரேஸ் என்னும் இப்பொறிகளால் எவ்வெவ்விதமான குணங்களுண்டாகுமோ அவையனைத்தும சூரியகிரணங்களாலும் உண்டாகின்றன. இதனால் சூரிய கிரணங்கள் ரோகங்களைப் போக்கக் கூடுமென்றறிகிறோம். வீட்டுக்கு வெளிப்புறங்களில் பாடுபட்டுழைக்கும் ஜனங்களுக்கு சர்மரோகமுண்டாவது அரிது. முகத்தின்மீது சூரியவெளிச்சம் விசேஷமாய் ஸம்பந்தித்து வருவதுபோலவே மற்ற அவயவங்களிலும் அதிகமாக வெளிச்சம் தாக்குவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொண்டால் மனிதர் இப்பொழுதிருப்பதைப் பார்க்கினும் அதிக ஆரோக்கியவான்களாகவும், ஊக்கமும் உத்ஸாஹமு முள்ளவர்களாகவும் வளரக்கூடும். வெளிச்சம் ஆரோக்கியமுண்டு பண்ணும். இருள் வியாதியை விருத்தியாக்கும். நாம் தினந்தோறும் சூரியகிரணங்களில் மூழ்கிவர அப்யஸிக்க வேண்டும். க்ஷயரோகிகள் தமது தேஹம் முழுமையுமாவது, மார்பை மாத்திரமாவது, அல்லது ரோகத்தினால் பாதிக்கப்படும் அவயவத்தையாவது பிரதிதினமும் சிறிது நேரம் வெயில் படும்படி வைத்திருப்பாரானால் ரோகஞ் சிறுகச் சிறுக நிவர்த்தியாகக் கூடும். நன்றாக வெளிச்சமில்லாத அறைகளில் தினந்தோறும் வெகுநேரம் வஸித்து வருபவர் முகம் ஒளிமழுங்கி பார்வைக்கு விகாரமாவதுடன், சரீர வலிவும் குன்றி, ஆரோக்கிய நிலைமையும் குறைந்து, உத்ஸாஹமுமில்லாமல், நாளுக்கு நாள் மனநோயுள்ளவராகவுமாவர். நாம் ஸாத்தியமான வரையில் வீட்டுக்குப் புறத்திலேயே பெரும்பான்மையான பொழுதைக் கழிக்கும்படி செய்து கொள்வது. உத்தமம். சூரிய கிரணம் நரம்பு மண்டலங்களின் கோளாறுகளைக் குறைத்து அவற்றிற்குச்சாந்த நிலைமையைக் கொடுக்குந் தன்மையன. இரத்தக் குழாய்களுக்குண்டாகும் ஸத்துவயீனத்தைப் போக்கும். க்ஷீணித்துப் போன சரீர பலத்தை மீண்டும் சரிப்படுத்தும்.

சூரிய கிரணங்கள் சரீரத்தில் அடிக்கடி ஸம்பந்திப்பதால் தேஹாரோக்கியம் அதிகப்படுவதில் ஸந்தேஹமில்லை. ஆகையால் அவ்விதம் ஆரோக்கியநிலைமையடைய விரும்புபவர் பிரதி தினமுங் கொஞ்ச நேரமாயினும் வெயிலில் இருக்கவேண்டும். நாம் எப்பொழுதும் சூரியனை தீமை செய்யக் கூடியதாகக் கருதாமல் நன்மை ய[illegible] தகுந்ததாகவே [illegible]விப்பது அவசியம். ரோகங்களைப் போக்குவதிலும், ஆரோக்கியத்தை நிலைநிறுத்துவதிலும் சூரிய கிரணங்கள் மிகவும் உதவிபுரியக் கூடியவைகளாயிருப்பது பற்றி, அதிக பொருட் செலவு செய்து சேகரிக்கப்படும் ஔஷதாதிகளைவிட இவ்விலையில்லா வெயிலையே எவ்விதத்திலும் மேலானதாகக் கருதவேண்டும். இக்காரணத்தினாலேயே நமது பெரியோர்களும தினந்தோறும் சூரிய நமஸ்காரம் செய்வது அவசியமென்று ஏற்படுத்தினார்கள் போலும்.

THE DIABETES MELLITES.*

மதுமேஹமென்னும் நீரிழிவுரோகம்.

By

Dr. A. J. HODGSON, M. D.

அநேகம் ஜனங்கள் மதுமூத்திரரோகத்தினால் பிராணாபாயமான நிலைமையை அடைந்து வருகின்றனர். சரீரத்தின் உட்புறத்திலுள்ள சில அவயவங்கள் சிதழிவதால் இவ்வியாதி சிலருக்கு உண்டாகக் கூடுமாயினும், அநேகம் பெயருக்கு மிதமின்றி ஆஹாரமுண்பதாலும், உபயோகிக்கத் தகாத [illegible] லும், மற்றும் பலவித [illegible]

* இவ்வியாஸம் கனெடியன் மெடிகல் [illegible] யேஷன் ஜர்னலிலிருந்து மொழி பெய[illegible]

களாலும் இப்பிணி உற்பத்தியாவதாய் நிச்சயமாகக் கூறலாம்.

இவ்வியாதிக்கு ஔஷதப்பிரயோகங்களால் பெரும்பாலும் உபயோகமுண்டாவதில்லை. மருந்துண்பதை நிறுத்திய பின்பு, ஆஹார விஷயத்தில் வைத்தியர்களால் உபதேசிக்கப்படும் பத்தியக்கிரமங்களையும், ஆரோக்கிய மார்க்கங்களையும் முறைதவறாமல் நிறைவேற்றுவதால் தேஹ ஸௌக்கியம் விருத்தியடைவதாக அநேகம் பிணியாளிகளின் சரித்திரத்தைக் கொண்டுப் பிரத்தியக்ஷமாய் விஷயத்தை அறிந்துவருகிறோம். உட்கொள்ள வேண்டிய உணவின் அளவு இவ்வளவென்பதை மிக ஜாக்கிரதையாகப் பிணியாளிக்கு அறிவிக்கவேண்டும். எவ்விதமான ஆஹாரம் எடுத்துக்கொள்ளலாமோ அவ்விஷயத்திலும் வெகு கவனம் செலுத்தவேண்டும். அரிசி, சோளம், காரன் ப்ளவர் என்பவற்றால் பக்குவம் செய்யப்படும் கஞ்சியினங்கள் உபயோகிக்கத் தகுந்தவையாகா. வேறு விதமான உணவுகளையும் தகுந்த அளவில் காலமறிந்து உபயோகிக்கும்படி மதுமேஹ ரோகியிடம் வைத்தியர் வற்புறுத்திக் கூறிவரவேண்டும். உணவுகளை நன்றாக மென்றுச் சாப்பிடுவது மிகவும் அவசியம். இவ்விஷயம் ஸாதாரணமாய் அனைவருக்கும் பொதுவானதென்றாலும், ரோகிகளுக்கு, அதிலும் மதுமேஹ ரோகிகளுக்கு முக்கியமென்றறியவும். உணவு நன்றாக மெல்லப்பட்டு வழூமூண்ட பிறகே ரோகிகள் அதை விழுங்கவேண்டும். மதுமேஹிகள் சிறிது உவர்ப்பான தண்ணீரை அருந்துவதே உத்தமம். வாலையிலிட்டு ஆவியாகச் செய்து இறக்கிய வெகு நிர்மலமான ஜலம் இவர்களால் சிறிதும் உட்கொள்ளத்தகுந்ததல்ல.

மதுமேஹிகளுக்கு மலபந்தம் மிகவும் துன்பம் விளைவிக்கும். ஆகவே அவர்கள் அவசிய [illegible] மலம் சிக்காதபடி முன் [illegible]யிருப்பது நலம். சிறிது ஆமணக்கெண்ணெய் உட்கொண்டு மலச்சிக்கலை எளி[illegible]க்கிக்கொள்ளலாம். ஆகிலும் அதிகமாய் பேதியுண்டாக்கக்கூடிய ஔஷதங்களை உபயோகிப்பது பிசகு.

மனதுக்கு எவ்விதத்திலும் ஆயாஸமுண்டாகாதபடி கவலையின்றியிருக்கவேண்டும். சரீரத்திற்கும் அதிக ஆயாஸம் உற்றதல்லவாயினும், சிறிதளவு தகுந்த[illegible] வ்யாயாமமென்னும் தேஹப்பயிற்சி செய்வது ஆரோக்கியம் பெறுவதற்கு அனுகூலமாயிருக்கும்.

உளுத்தமாவைப்போல் மிகவும் வழுவழுப்பாயிருக்கும் பதார்த்தங்களில்கூட அரிசிமாவுகளிலிருப்பது போன்ற கஞ்சியினம் கொஞ்சம் கலந்திருக்கின்றது; ஆகையால் நன்றாகப் பரிசோதித்தறிந்து வழுவழுப்பான ஸத்துவம் விசேஷமாய் எவற்றிலுண்டோ அவ்விதமான வஸ்துக்களையே மதுமேஹரோகி உபயோகிக்கவேண்டும். உளுத்தமாவைப்போல் மிகவும் வழுவழுப்புள்ள வஸ்துக்களால் பக்குவம் செய்யப்பட்ட சிறந்த ரொட்டிகளையும் இப்பிணியாளர் உபயோகிக்கலாம். இந்த ரோகிக்கு அரிசி, சோளம், காரன் ப்ளவர் முதலானவற்றாலான கஞ்சியினங்களைச் சாப்பிடவேண்டுமென்கிற அவா உண்டாகக்கூடும்; ஆகையால் வீட்டிலுள்ள பெரியோர்கள் பிணியாளி அவ்வித வஸ்துக்களையுபயோகிக்காவண்ணம் கவனித்து வருவதுடன், அவனுக்கு எச்சரிக்கையும் அப்போதைக்கப்போது செய்து வர வேண்டும்.

வயதானவர்களைப்போல் சிறுபிள்ளைகள் மதுமேஹரோகத்தினால் முற்றிலும் பிராணபாயகரமான நிலைமையைப் பெறுவதில்லையாயினும், வைத்தியன் வியாதி நிதானங்களைப் பரீக்ஷித்துக் கூறும்போது ஒருவிதத்தில் தைரியமும், ஒருவிதத்தில் அஜாக்கிரதையாகவிருந்தால் ஸம்பவிக்கக்கூடிய தீங்கையும் பிணியாளியின் மனம் கவலையுறாதபடி திறமையுடன் எடுத்துரைக்க வேண்டும். புத்திசாலியான வைத்தியர் இவ்வியாதிக்ரஸ்தர் விஷயத்தில் வெகு சிரத்தை பாராட்டி சிகித்ஸையும் செய்வர்; வைத்தியர் எவ்வளவு சிரத்தையாகவும்

ஊக்கமாகவும் சிகித்ஸை செய்கிருர்களோ, அவ்வளவு சிரத்தையும் நம்பிக்கையும் வைத்தியர் கூறும் விஷயங்களில் ரோகிக்கும் உண்டாக வேண்டும். பிணியாளி திறமையுள்ள வைத்தியர் உபதேசித்தவாறே சிறிதும் தவருமல் நடந்து வருவாளுயின் சில ஸமயம் இக்கொடிய வியாதியினிடமிருந்து மீட்சிபெறலாம். எனது உபதேச மொழிகளில் நம்பிக்கைவைத்த அனேகம் மதுமேஹ ரோகிகள் அவ்விதம் வியாதி நீங்கி ஆரோக்கிய நிலைமையையும் பெற்றிருக்கின்றனர்.

PAINLESS CHILD BIRTH.

வேதனையில்லாப் பிரஸவம்.

ஜெர்மனி வைத்தியர்கள் நூதனமாகக் கண்டுபிடித்தது.

By

Mr. S. RAJAGOPALA CHARIAR, B.A.

வேதனையில்லாமற் பிரஸவிக்கச் செய்யும் முறைகளைப்பற்றிய விருத்தாந்தங்கள் மெக்ளூர் மேகஸைன் (Mcclur's magazine) என்கிற பத்திரிகையின் ஜுன்மாதத்திய ஸஞ்சிகையில் வெளியாயிருக்கின்றன. அடியிற் கூறப்படும் முறையானது 5000 பிரஸவங்களில் சிறிதும் தவறுதலின்றி மிகவும் திருப்திகரமாய் நற்பயன் விளைவித்ததாகத் தெரியவருகிறது.

பிரஸவிக்கிற ஸ்த்ரீகளுக்கு ஸ்கோபோலாமின் (Scopolamin), அபினிச்சத்து (Morphium) என்கிற இரண்டு சரக்குகளையும் சேர்த்து இரண்டொருமுறை இரத்தத்திற் குத்திச் செலுத்தினுல் ஒருவகையான மயக்கம்போன்ற நித்திரை யுண்டாகிறது. இவ்விதம் செய்வதற்கு ஸ்த்ரீ பிரஸவிக்கும் அறையானது சிறிது இருட்டாகவும் நிச்சப்தமாகவும் இருக்கவேண்டும். எதிரிலுள்ள மனிதரையும் மற்றும் விஷயங்களையும் அறியமுடியாதபடி அவளுடைய உணர்ச்சி மழுங்கி வரவேண்டுவதுடன், மயக்க நிலைமையையும் அதிகமாய் அடையாதபடி கவனிக்கவேண்டும். சரீரத்திலுள்ள தசைநார்களின் சக்திமட்டும் சிறிதும் குன்ருதபடி வெகு ஜாக்கிரதையாக ஔஷதப்பிரயோகஞ் செய்யவேண்டும். இவ்வௌஷதப் பிரயோகத்தினுலுண்டாகும் ஒருவித மயக்கமானது, பிரஸவம் முடிந்தேறுகிறவரையில் கொஞ்சமும் வேதனை யின்னதென்பதையே உணராமலிருக்கச் செய்வதால் பிரஸவிக்கும் ஸ்த்ரீகளுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும். இரத்தத்திற் செலுத்திய மருந்து சரியாக வேலை செய்கிறதா வென்பதையறிய அப்போதைக்கப்போது பரீக்ஷை செய்து வரவேண்டும். அதாவது, முதலில் ஔஷதத்தை இரத்தத்திற் செலுத்திய பிறகு ஏதேனும் ஓர் உருவத்தை இரண்டு மூன்றுமுறை அவளுக்குக் காட்டவேண்டும்; அவ்வுருவம் இன்னதென்று உணர்ந்துவரும் வரையில் போதுமானவளவு மயக்கமுண்டாகவில்லை யென்றறிந்து, மறுபடியும் ஒருமுறை ஔஷதத்தை உட்செலுத்தலாம். இவ்வாறு செய்து 30-நிமிஷம் கழித்து மீண்டும் அவளைப் பரீக்ஷிக்க, விஷயமொன்றும் உணரப்படாமற் போமாயின், அப்பொழுது போதுமானவளவு மயக்கமுண்டானதாய் அறியவும். இவ்விதம் செய்தால் ஸ்த்ரீக்குப் பிரஸவவேதனையென்பதே தெரியவராது. சில கஷ்டப் பிரஸவங்களில் செய்வதுபோல் கருவிகளை யுபயோகித்து சிசுவை வெளிப்படுத்தவேண்டிய அவசியமே யிராது. ஸாதாரணமாய் பிரஸவிக்கிற ஸ்த்ரீகளுக்கு அதிக வலியும் தொந்தரவும் ஏற்படுவது ஸஹஜம். எவ்வேதனையினும் பிரஸவவேதனை பொறுக்கமுடியாததென்பது அனைவரும் அறிந்தவிஷயம். அவ்வாறு வேதனை யுண்டாகும்பொழுது உணர்ச்சி நரம்புகள் அப்போதைக்கப்போது அவ்வேதனையை சமனப்படுத்தவும், ஆகவே தசைநார்கள் சுருங்குவதைச் சிறிது குறைக்கவும் முயல்வது இயல்பு; அதனுல் நரம்புகளின் வன்மையும் [illegible] சிறிது வீணில் செலவாய்விடும். அதுவுமின்றி இவ்வௌஷதத்தினுலுண்டாகும் [illegible] பயனுக, வேதனையுணரும் தன்மை [illegible] களுக்குக் குறைவதால், நரம்புகள் [illegible] மல் தசைநார்களை வேண்டியவளவு [illegible]

வழிகளில் வேலைசெய்யத் தூண்டுகின்றன; ஆகவே கூடியசீக்கிரத்தில் கஷ்டமின்றி பிரஸவநிலை முடிவுபெறும். காலையில் 5-மணிக்குப் பிரஸவித்த ஒரு ஸ்த்ரீ, 8-மணிக்கு காலை போஜனமாகிய ரொட்டி காபி முதலியதைச் சாப்பிட்டதாகவும், அன்று 12-மணிக்குப் பகற்போஜனமும் சாப்பிட்டு, மறுநாள் வெளியிலுலாவி, 5-ம்நாள் வண்டியில் சுகமாய் சவாரி செய்து, ஒருவாரம் முடிவதற்குள் சுகப்பிரஸவமான நற்செய்தியை விசாரிக்க வந்திருந்தவர்களுடைய வீடுகளுக்கெல்லாம் சென்று மரியாதையின் பொருட்டு அவர்களனைவரையும் பார்த்து விசாரித்து வந்ததாகவும் தெரியவருகிறது.

இவ்விதம் செய்துவந்தால் பிரஸவித்த ஸ்த்ரீகளில் ஒருவருக்கும் உயிர்ச்சேதம் நேரிடமாட்டாதென்று அறியப்படுகிறது. குழந்தைகளின் மரணங்கூட இதனால் மிகவும் குறைவுபட்டு வருகிறது. ப்ரீபெர்க் என்னுமிடத்திலுள்ள வைத்தியசாலையிலும் (Freiburg Hospital), மற்றும் அதுபோன்ற ஸ்தாபனங்களிலும் நடந்துவரும் இவ்விதமான நூதனமுறையை நேரில் அனுபவத்திலறிந்து வந்தவர்கள் இவ்விஷயத்தை மிகவும் வியந்துப் பேசுகிறார்கள். ப்ரீபெர்க் ஆஸ்பத்ரியில் 3600 பிரஸவங்களைப்பற்றிய விருத்தாந்தங்கள் முழுமையும் அங்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வளவு கேஸுகளில் தாய்க்காவது குழந்தைக்காவது இதுவரையில் பிராணாபாயம் ஸம்பவித்ததில்லை. ஸ்கோபோலாமின் என்கிற ஔஷதத்தை யுபயோகிப்பதால் பிரஸவகாலத்திலாவது அதன்பிறகாவது தாய்க்கு அல்லது குழந்தைக்கு ஒருவித கெடுதியும் நேரிடுவதில்லை. ஸ்கோபோலாமின் என்கிற சரக்கை [illegible] பிரஸவம்முடியும் வரையிலும் உபயோ[illegible] ஔஷதத்தைச் சரியான [illegible] ஏற்றக்குறைவின்றி [illegible]ப்பதில் திறமையும் அநுபவமுமுள்ள வைத்தியரால் இம்முறை நிறைவேற்றப்பட[illegible] பிரஸவ[illegible] இச்சப்தமாகவும், சிறிது இருளடைந்தும், தனிமையாகவுமிருக்கவேண்டும்; பிரஸவிக்கும் ஸ்த்ரீயை வெகு ஜாக்கிரதையாக நிமிஷந்தோறும் கவனித்து வருவதற்கு ஸௌகரியமும் வேண்டியிருக்கிறது; ஆகவே அதிக பிணியாளிகளடர்ந்த பெரிய ஆஸ்பத்ரிகளில் இம்முறை நிறைவேற்றக் கூடியதல்ல.

இவ்விதமாகப் பிரஸவித்த ஸ்த்ரீகளுக்குப் பிரயாஸமென்பதே தெரியாமல் ஸுகப்பிரஸவம் ஏற்பட்டதுமல்லாமல், அவர்களுடையவும் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுடையவும் ஆரோக்கியம் அபிவ்ருத்தியாய் ஆயுளும் நஷ்டமடையாமல் நற்பயன் விளைந்ததாகத் தெரியவருகிறது. இந்தமுறையானது இவ்வளவு உபயோககரமாக இருப்பதால், இத்தேசத்திய டாக்டர்களில் சிலரையும், ஸ்த்ரீ வைத்தியர்களையும் ஜெர்மனிக்கு அனுப்பி இதைக் கற்று வந்து இந்நாட்டில் பிரஸவிக்கிற ஸ்த்ரீகளுக்கும் இம்முறை பிரயோகிக்கப்படுமாறு கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்வார்களாயின், பிரஸவத்தினால் தாய்களுக்கும் குழந்தைகளுக்கும் ஸம்பவிக்கிற அநேகவகையான அபாயங்கள் நேரிடாமலிருக்கும்.

THE METHOD OF PURIFICATION OF CANNOBISS INDICÆ.

கஞ்சாவின் சுத்திமுறை.

BY

Mr. V. S. AIYAN PILLAI VAIDYAR.

கஞ்சாவானது, வெறி அல்லது மயக்கமுண்டாக்கக்கூடிய வஸ்துவானாலும், இந்து வைத்தியர்களால் இது சில வருஷங்களுக்கு முன்வரையில் மிகுதியும் கையாளப்பட்டு வந்தது. தற்காலம் அருமையாய் இன்றியமையாச் சில பிரயோகங்கட்கு மாத்திரம் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இதன் பச்சிலையை இடித்துப் பிழிந்தெடுத்த ரசத்தை எண்ணெயுடன் சேர்த்துத் தைலமாகச் செய்துவந்த அநேக தைல முறைகள் இப்போது நினைக்கவும் முடியா

த்தாய் விட்டமைக்கு வருத்தப்பட வேண்டியதுதான். அரசாங்கத்தார் நிர்ப்பந்தத்தால் இதன் பச்சிலையை எவ்வகையாகவும் விலைகொடுத்தும் பெறுவதற்கில்லை. இதன் தைலத்தால் தீராத ஒற்றைத்தலைநோய், முகவாதம், பலவகைச் சன்னிகள், கைகால் குடைத்தல், பக்ஷவாதம் முதலிய கடோரரோகங்கள் விரைவிற்குணப்படும். உலர்ந்த கஞ்சாவால் விஷபேதி, அதிஸாரம், குடல் வாயு, அஜீர்ணம், பலவகை வயிற்றுப் போக்கு, கைகால் அசதி முதலிய பலரோகங்கள் நிவ்ருத்தியாகும். உலர்ந்த கஞ்சாவின் விலை யதிகப்பட்டதாலும், இவ்வளவெடைக்குமேல் ஒருவர் பெறக் கூடாதென்னுஞ் சட்டமேற்பட்டு விட்டதாலும் கஞ்சாவாலாகும் ஔஷதங்கள் மிகுதியுங் குறைந்துவிட்டன. ஒரு தோலாக் கஞ்சாவை 7-அணாவுக்கு வாங்கி வந்து கோல் விரை நீக்கினால் முக்கால் தோலா எடைதேறும். அதை ஊறவைத்துக் கசக்கிப் பிழிந்துலர்த்தி வறுத்திடித்து வஸ்திரகாளிதம் செய்தெடுத்தால் கால்தோலா எடைதான் கைகூடுகிறது. அப்போது கால்தோலா எடை கஞ்சாத்தூளை ஏழணா விலைக்குப் பெறவேண்டியிருப்பதால் வைத்தியர்கள் என்செய்வார்கள்! அபின் தோலா ஒரு ரூபாய்க்குக் கிடைக்கக் கஞ்சாத்தூள் தோலா ஒன்றேமுக்கால் ரூபாயென்றால் யார்தான் கஞ்சாப் பிரயோகத்தை முடிக்க முந்துவார்கள்?

சில அநாகரிக ஜனங்கள் மூடத்தனத்தினால் கஞ்சாவை மிதமிஞ்சி யுபயோகித்து வீணில் தேஹத்தையும் ஆயுளையும் அழித்துக்கொள்வதை நோக்கினால் அவர்கள் விஷயத்தில்மட்டும் இவ்வஸ்து எவ்வளவு துர்லபமாகப்போயினும் பாதகமில்லை. கடைகளில் கிடைக்கும் கஞ்சாயிலை பெரும்பாலும் அசுத்தமானது. ஸாதாரணமாய் கஞ்சாவை யுபயோகிக்கும் ஜனங்கள் அவ்விதச் சரக்கைக்கொண்டே சீரழிந்துவிடுகின்றனர். வைத்தியரல்லாத இதர ஜனங்களுக்கு இச்சரக்கு முற்றிலும் கிடைக்காதபடி ஏற்பாடுசெய்வது நலமே. ஆனால் வைத்தியர்களுக்கு இதைக் கிடைக்காமற்செய்வதுமட்டும் பல ஸமயங்களில் வைத்தியர்களுக்கு மட்டுமேயல்ல பிணியாளருக்கும் கஷ்டத்தை யுண்டுபண்ணும். கஞ்சா இலாகிரி வஸ்துவானதால் அதை நன்றாகச் சுத்தி செய்தே சிகித்ஸாமுறைகளில் உபயோகிக்க வேண்டும்.

சுத்தி :—காம்பு விதை இவற்றை நீக்கிய கஞ்சாவை இளநீர்ச்சலத்தில் இரவு முப்பது நாழிகையும் ஊறவைத்து மறுநாட்காலையில் நன்றாய்ப் பிசைந்து ஜலத்தை வடித்துவிடவும். மறுபடியுங் குளிர்ந்த ஜலம்விட்டுக் கசக்கிப் பிழிந்து ஜலத்தை வடித்துவிடவேண்டியது. இப்படியே ஜலம்விட்டுப் பதினொருதடவை கசக்கிப் பிழிந்து வெயிலிலுலர்த்தவேண்டியது. உலர்த்தியெடுத்த கஞ்சாவை அன்றிரவு காடித் தண்ணீரிலிட்டு 30-நாழிகையும் ஊறிய பின் மறுநாட்காலையில் கசக்கிப் பிழிந்து காடியை வடித்துக் குளிர்ந்த ஜலம்விட்டு ஒரு தடவை கழுவிப் பிழிந்து வெயிலில் சுமாராயுலர்த்தி வாயகன்ற மண் பாண்டத்திலிட்டுச் சிவக்க வறுத்தெடுத்துக் கொள்ளவேண்டியது.

குறிப்பு:—கஞ்சா, இலையாயிருந்தாலும் விரைவில் வறுபடாது. மெதுவான தீயைக்கொண்டு சிவக்கும் பக்குவம் வரும்வரையும் வறுக்க வேண்டும். வறுக்கும்போது சற்றுச் சிவந்த நிறம் வருமுன்னர் புகையுண்டாகி வறுப்பவனைப் பயமுறுத்தும். தீப்பற்றி விட்டதென்று கூடச் சந்தேகிப்பான். அப்புகையெல்லாம் போனால் பிறகுதான் சிவக்கும். கறு[illegible]படி அடிக்கடி கவனித்து நல்ல வாசனை வந்து கஞ்சாவுஞ் சற்றுக் கறுகலான சிவப்பு நிறம் வந்தவுடனெடுத்துக் கொள்ளவேண்டும். [illegible] விட்டால் பயனில்லை. வறுபடாதிருந்தால் பச்சைத்தழை வாசனை [illegible] கொடுக்கும். ஆகையால் ஜாக்கிரதையாய் வறுத்தெடுக்க வேண்டியது.

WATER IN THE DIETARY OF YOUNG CHILDREN.

சிறு குழந்தைகள் தண்ணீர் அருந்துதல்

By
Mr. V. K. RAGHAVAN.
Medical Practitioner.

சிறு குழந்தைகளுக்கு வேண்டியவளவு பருகுவதற்கு ஜலம் கொடுக்கவேண்டுமென்கிற விஷயம் ஜனங்களுக்கு அவசியமாகத் தோற்றாமலிருப்பது விஸனிக்கத்தக்க விஷயமென்றும், முலையூட்டியோ, கைப்பால் போட்டியோ வளர்க்கப்படும்பொழுது விசேஷமாக வெயிற்காலங்களில் குழந்தைகளுக்குக் குடிப்பதற்கு ஜலம் கொடாமற்போவது பிசகென்றும் டாக்டர் ரெம்ஸென் என்பவர் கூறுகிறார். இவ்வாறு ஜலம் கொடாமலிருப்பதால், குழந்தைகளுக்கு ஊட்டப்படும் உணவுகள் இரைப்பையில் விழுந்ததும், அவ்வுணவு சீக்கிரம் ஜீர்ணமாவதற்காக அதில் சேர்க்கப்பட்டிருக்கும் திரவபாகமனைத்தும் உடனே இரைப்பையால் உறிஞ்சு இரத்தத்தில் சேர்க்கப்படுமாகையால், அவ்வுணவிலுள்ள ஜலபதார்த்தமனைத்தும் செலவழிந்து மிகவும் திரண்டு கனமாகப்போன கெட்டிப்பொருள் மாத்திரம் வயிற்றில் தங்குகின்றது. அவ்விதம் கெட்டியாகப்போன உணவானது இரைப்பையில் ஒருவாறு புளித்துப்போய் ஜீர்ணமாகாமல் அஜீர்ணரோகத்தையும், வயிற்றுவலியையும், பேதியையும் ஒருங்கே உண்டு பண்ணுகின்றது. ஜலக்குறைவி[illegible] இரத்தமும் இறுகிப்போய் அதன்பயனாக [illegible]வைநீர் சிறிதும் வெளிப்படாமல் தடுக்கப்[illegible] [illegible]க்கிரமாக உடலனைத்தும் ஒடுங்கிவரவும் [illegible]ம். சூடாகவும் வரட்சியாகவுமுள்ள காலங்[illegible]ல் சிறு குழந்தைகளிடம் குளிர்ந்த ஜலம் [illegible]டுபோனால் அந்தக் குடிக்க அவை மிக ஆவலுள்ளவைகளாயிருக்கும். அந்த ஸமயத்தில் குழந்தைகளுக்கு நல்ல குளிர்ந்த [illegible]ருகக் கொடுப்பதால் சிறிதும் பாதகமில்லை. அப்பொழுது ஒருமணிக்கு ஒருதடவை அல்லது அடிக்கடி குளிர்ந்த ஜலம் கொடுப்பது இன்றியமையாததாம். எப்பொழுது தேஹத்தில் ஜலபாகம் குறைந்துவிடுகின்றதோ அப்பொழுது குழந்தை அடிக்கடியும் பயந்து அழும்; சரீர உஷ்ணமும் கையில்நாடி நடையும் சிறிது அதிகரிக்கும்; சர்மம் சூடாகவும் வரட்சியுள்ளதாகவும் ஆய்விடும்; அடிக்கடியும் முலையுண்ண விரும்பும். இந்த ஸமயத்தில் வேண்டியவளவு குளிர்ந்த ஜலத்தைப் பருகக் கொடுத்துப் போஷித்தால் முற்கூறிய குறிகள் யாவும் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடும்; அவ்வாறு செய்யாமற்போனால் சீக்கிரம் சரீரத்தில் ஒடுக்கம் காணத்துவக்கும். இந்நிலைமையில் கிரமமாக அபாயகரமான விகாரங்கள் உண்டாய்வரும்; சரீர உஷ்ணம் 105 முதல் 106 டிக்ரிவரையில் அல்லது அதற்குமேலும் அதிகரிக்கும்; நாடியானது மெல்லிய நார்போல் நெகிழ்வதுடன் நிமிஷத்திற்கு 180 முதல் 200 தடவை வரையிலும் படபடப்பாகவும் துடிக்கும்; சர்மமானது நோயுண்டாகுமாறு வெகு சூடாயிருக்கும்; ஆனால் கை கால்கள்மட்டும் குளிர்ந்திருக்கும்; முகம் சுடித்துப்போய் கண்களும் ஆழ்ந்து சிறிது சுருக்கங்கொள்ளும்; சிரஸின் மத்தியிலுள்ள உச்சிக்குழியும் ஆழமாகும்; கைகள் கெட்டியாக மூடிக்கொள்ளப்படும்; வெகு வேகமாகவும் விஷமமாகவும் மூச்சுவிடப்படும். ஞாபகக்குறைவும் ஸம்பவிக்கும். இப்பரிதாப நிலைமையிலிருக்கும் ஒருகுழந்தை ஜலத்தை வெகு ஆவலுடனும் ஆக்கிரத்துடனும் வேகமாய்க் குடிக்கும். ஜலக்குறைவால் இவ்விதம் ஆரோக்கியக் குறைவடைந்த குழந்தையின்மேல் ஈரத்துணியைப் போர்த்து, தலையை குளிர்ந்தஜலத்தால் துடைத்துக்கொண்டு, எவ்வளவு குடிக்க விரும்புகிறதோ அவ்வளவு ஜலத்தையும் உட்கொள்ளக் கொடுத்து வரவேண்டும். இதுதான் இவ்வித நிலைமைக்குத் தகுந்த பரிஹார முறையாகும். இவ்விதம் செய்வதால் சீக்கிரத்தில் நற்குணம் பிறக்கும்; குழந்தை அழுகை ஓய்

ந்து ஆத்திரமடங்கி அமைதியாயிருக்கும்; பயப்படுந்தன்மையும் சாந்தமாகும்; பிறகு அதற்கு நன்றாக நித்திரையும் வரும். தகுந்த வளவு பருகுவதற்கு ஜலம் கொடுக்காமற்போவதும் குழந்தைகளின் மரணம் அதிகமாய்வருவதற்கு முக்கியமானதோர் ஹேதுவாகும் என்பதை ஒவ்வொருவரும் கவனத்தில் வைக்க வேண்டியது அவசியம். சரீரத்தில் ஜலக்குறைவாலுண்டான மேற்கூறிய குறிகளைக் கண்டு சில வைத்தியர்கள் வேறுவிதமான ரோகமென்றும், ஜன்னியென்றும், காற்று சங்கையென்றும், ஸந்நிபாத ஜ்வரமென்றும் பிரமித்து வீணில் ஔஷதங்களைக் கொடுத்து இளங்குழந்தையின் மெல்லிய சரீரத்தை மீண்டும் வாட்டிவிட முயலாமல், காரணங்களைத் தீரவிசாரித்து இவ்வித ஆரோக்கியக் குறைவையகற்ற முற்கூறிய உபாயங்களைச் செய்யவேண்டும். ஜலக்குறைவினு[illegible]தாரணமாய் உடல்முடிய ஒருவிதமாக தாபமே விட்டு விகாரங்கொள்வதுமல்லாமல், முக்கியமாய் இரைப்பையும் குடலும் அதிகமாகக் கோளாறடையும். ஆகவே சிறு குழந்தைகளுக்கு எப்பொழுதும் வேண்டியவளவு குடிப்பதற்கு ஜலம் கொடுத்துவர வேண்டியதுடன், வெயிற்காலங்களில் காலந்தவறாமல் அடிக்கடியும் தண்ணீரைக் கொடுத்துக்கொண்டு அந்தந்த வேளைகளில் முலை யூட்டிக்கொண்டும் வர வேண்டும். கோடைக்காலங்களிலும் மற்ற நாட்களிலும் குழந்தைகளுக்கு ஜலக்குறைவினாலும், பல் முளைப்பதாலும் ஸம்பவிக்கும் அகால மரணங்களைத் தடுப்பதற்குக் குழந்தைகளை இவ்விதம் முன் ஜாக்கிரதையோடு பராமரித்து வருவதே பொருந்திய பரிஹாரமுறையாம்.

THE FIRST WEEK OF TYPHOID.

ஸந்நிபாத ஜ்ரவத்தில் முதல்வாரம்.

BY

Mr. S. KRISHNASAWMI PANDITHAR,
Aurvedic Medical Practitioner.

ஸந்நிபாத ஜ்வரம் மிகவும் கஷ்ட ஸாத்தியமான வியாதியென்றும், ஒருக்கால் குணமாவதாயிருந்தாலும் இருபத்திரண்டு நாட்கள் அல்லது மூன்று வாரங்கள் வரையில் விசேஷமான துன்பமனுபவித்து அத்துடன் பிணியாளி போராட வேண்டியிருக்குமென்றும் வைத்தியர்கள் அறிந்த விஷயம். இது மூன்று வாரம் வரையில் கவலைக்கிடமான நிலைமையையுண்டு பண்ணிய போதிலும், முதல் வாரத்தில் இது ஸந்நிபாத ஜ்வரமா அல்லவா என்கிற ஸந்தேஹக்குறி[illegible]டுவதியல்பு. ஆகவே ஸந்நிபாத ஜ்வரம் ஒருவனுக்கு உண்டானால் அதன் முதல் வாரத்தில் வைத்தியன் எவ்விதமான முயற்சிசெய்ய வேண்டும்?

வைத்தியன் முதன்முதலில் முறைப்படி ரோகியின் சரீர நிலைமையை நன்றாகப் பரீக்ஷிக்க வேண்டும். வியாதி ஆரம்பித்த முதல் வாரத்தில் இப்பிணியாளியைப்பரீக்ஷித்து விஷமின்னதென்று உள்ளப்படி யுணருவது அரிது. இப்பொழுது ஆங்கில வைத்தியர்கள் ரோகியின் சரீரத்திலிருந்து சிறிது இரத்தத்தைக் குத்தி யெடுத்து, அதிலுள்ள குணதோஷங்களை ஸூக்ஷ்மதர்சன யந்திரங்களின் மூலமாய் பரீக்ஷித்து ரோகநிர்தாரணம் செய்வதற்காக அதை அவ்வித ஆராய்ச்சி சாலைக்கு (Pathological laboratory) அனுப்புகிறார்கள்; ஆனால் பிணியின் ஆரம்பதசையில் அவ்விதம் பரிசோதிக்கப்படும் இரத்தத்தைக் கொண்டு முடிவான தீர்மானம் ஏதும் செய்யக் கூடவில்லையென்று அவர்களும் கூறுகின்றனர். இவ்விதம் பரீக்ஷிக்கையில் விஷமஜ்வரத்திற்கும் ஸந்நிபாத ஜ்வரத்திற்குமுள்ள பேதங்களைப் பகுத்தறிவதிலேயே முக்கியமாய் கஷ்[illegible]முண்டாகிறது; ஆகிலும் இவ்வித ஸந்தேகமு[illegible]கிற ஸமயத்தில் பிணியாளி [illegible]னைவை அடிக்கடி உபயோகித்[illegible] உண்டாயிருப்பது விஷம ஜ்வர[illegible] அதன் குறிகள் சீக்கிரத்தில் [illegible]றும், அவ்விதம் [illegible] மாகாமல் வியாதி [illegible] மானால் அது பெரு[illegible] ஸந்நிபாத ஜ[illegible] மாகவே இருக்கவேண்டுமென்[illegible]

மெனக் கூறுகின்றனர். அநேக ஸமயங்களில் விஷமஜ்வரத்துடன் வருந்தும் பிணியாளி கொய்னைவை யுட்கொள்ளாமற் போயினும், அவனது இரத்தம் பரிசோதிக்கப்படுகையில் வியாதிக்குக் காரணமான விஷக் கிருமிகளை அதில் காண்பது அரிதாகும். சிலருக்குக் கொய்னைவை யுபயோகித்தும் குணம் தெரியாமல், ஆகவே ஸந்நிபாத ஜ்வரமாயிருக்குமென்றும் பிரமித்து, [illegible] அது விஷமஜ்வரமென்றே தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இவ்வித காரணங்களால் விஷமஜ்வரத்தையும், ஸந்நிபாத ஜ்வரத்தையும் அவற்றின் ஆரம்ப நாட்களில் பகுத்தறிந்து தீர்மானம் பண்ணுவது கடினமென்றே அநேகர் அபிப்பிராயப்படுகின்றனர். சில ஸமயம் விஷமஜ்வரமும், ஸந்நிபாதஜ்வரமும் சிலருக்கு ஒருமிக்கவும் காண்பதுண்டு. எவ்வித மிருந்தபோதிலும் ஸந்தேஹப்படக்கூடிய நிலைமைகளிலெல்லாம் முதன் முதல் விஷமஜ்வரஹாரமான சிகித்ஸையைச் செய்வதே கடமையாம். கொய்னை முதலியதைக் கொடுத்தும் விஷம ஜ்வரம் நிவ்ருத்தியாகாமலிருக்கலா மென்பது வெகு அபூர்வமாய் ஒரு கேஸில் இருக்கலாமேயன்றி, பெரும்பான்மையான கேஸுகளில் விஷமஜ்வரமாயிருந்தால் அவ்வித சிகித்ஸையினால் குணம் தெரியாமற் போவதில்லை. ஆகவே ஸந்தேஹமான கேஸுகளிலும், வெகு அதிகமான தாபத்துடன் ஆரம்பிக்கும் ஜ்வரங்களிலும் [illegible]வில் கொய்னைவைக் கொடுக்கும் முறை [illegible]ர்க்கியமென்றே ஆங்கில வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். அவ்விதம் செய் [illegible] ஜ்வரம் விடாமற் காய்வதுடன் மூன்றாம் [illegible] ந்து விடாஜ்வரமாகவும் மா [illegible] பாத ஜ்வரமாகத்தான் இருக் [illegible] ஸந்நிபாத ஜ்வரமும் விஷமஜ்வரமும் கலந்துண்டாகலாமென்றோ. ஆயினும் அவ்வாறு [illegible] அறிவதும் அரிது. எவ்விதமி [illegible] ஜ்வரமுண்டான முதல் வாரத் [illegible] இவ்விரண்டு ஜ்வரங்களுக்கு [illegible] பேதங்களை [illegible] உணரக்கூடும்.

முதல்வாரத்தின் முடிவில் சரீரத்தில் வெண்சிவப்பு நிறமான தழும்புகள் ஸந்நிபாதஜ்வரத்திற்குக் காண்பதுண்டு. அக்குறியைக் கொண்டு அது விஷமஜ்வரமல்லவென்று அறியலாம்.

வைத்தியன் இவ்விரண்டு ஜ்வரங்களையும் பகுத்தறிவதற்கான முக்கியமான குறி ஸந்நிபாதஜ்வரத்தில் மற்றொன்றுண்டு; அதாவது முதல் வாரத்தின் முடிவில் சிறிது அதிஸாரம் அப்பிணியாளிக்கு ஆரம்பிப்பதுண்டு. இவ்வித குறியில்லாமலே, அது விஷமஜ்வரமாகவே இருக்கலாமென்று பலமானதோர் நம்பிக்கையிருக்குமாயின், அப்பொழுது வைத்தியன் வெகு சிறிய அளவில் ($\frac{1}{2}$-முதல் 2 நெல்லெடையளவு வரையில்) இரஸகர்ப்பூரத்தை ஸாதாரண உப்பு ஜலத்துடன் கலந்து உட்கொள்ளக் கொடுக்கலாம். அதனால் இரண்டு மூன்று முறை நன்கு பேதியாகும்; வயிறும் சுத்தமாய் ஜ்வரமும் குணமடையும். ஆங்கில வைத்தியர்களில் சிலர் இவ்விதம் செய்வதை ஒரு நியமமாகக்கொண்டிருக்கின்றனர் என்று சில வைத்திய பத்திரிகைகள் கூறுகின்றன; ஆனால் இது விஷமஜ்வரமாக இல்லாமல் ஸந்நிபாத ஜ்வரமாகவே இருந்தால் அவ்வாறு இரஸகர்ப்பூரமும் உப்பு நீரும் உட்செலுத்துவது சில ஸமயம் அபாயகரமாகவும் முடியும்; ஏனெனில் ஏற்கனவே ஸந்நிபாத ஜ்வரத்தில் குடல்களில் புண்ணுண்டாய் அவற்றில் தாபமதிகரித்து பேதியாவதற்கும் ஆரம்பிக்குமென்று வைத்தியர்களுக்குத் தெரிந்திருக்குமே; அந்நிலைமையில் எரிச்சலுண்டாக்கக்கூடிய உப்பு வகைகளைக் கொடுப்பதும், பேதிக்குக்கொடுப்பதும் பிசகு. ஆனால் சில கேஸுகளில் ஸந்நிபாத ஜ்வரமுண்டான முதல் வாரத்தில் மலபந்தம் விசேஷமா யேற்படுவதாகவும் தெரியவருகிறது; இவ்வாறு மலபந்த மிருக்கையில் சிறு

குடலின் உட்சர்மம் வியாதிகொண்டு அதிலிருந்து சிறிது இரத்தம் வெளிவந்து மலவழியால் பொசிந்து வரவுங்கூடும். முதல் வாரத்தில் குடல்கள் மேற் கூறிய வண்ணம் பலவிதத்தில் வைஷம்யப்பட்டு, சிலருக்கு அதிஸாரமும், வேறு சிலருக்கு அபூர்வமாய் மலச்சிக்கல் அல்லது இரத்தக்கசிவு என்கிற ஏதேனும் குறியும் காணக்கூடுமாதலால் இவற்றின் மூலமாகவும் முதலில் ஒரு நிச்சயஞ்ஞான மேற்படுவது துர்லபம்.

மற்ற ஸமயங்களைவிட முதல் வாரம் முடிய ஸந்நிபாதத்தில் ஜ்வர வேகமானது நன்கு அதிகரித்துக் கொண்டு வரும். காலையில் உஷ்ணமானது 104 டிக்ரியும், பகலுக்குமேல் 105 அல்லது அதற்கு மேலாகவும் ஸாதாரணமாய் விருத்தியாகும். இவ்வித ஜ்வரத்தினால் புத்திமாறாட்டமடைவான்; ஆனால் வைத்தியர்களுக்கும் உபசாரம் செய்பவருக்கும் அடங்காதபடி பிணியாளி வெகு வலிவுள்ளவன் போல் தொந்தரவு கொடுப்பான். முதல் வாரத்தில் ஸந்நிபாதரோகிக்கு உபசரிப்பவர் பிணியாளியோடு பெரும்பாலும் அதிகமாகப் போராடவேண்டி வரும். இவ்வித குறியைக்கொண்டு முடிவாக அது ஸந்நிபாத ஜ்வரமென்று நாம் தீர்மானித்துக்கொள்ளலாம். இந்த நிலைமையில் சிறிது அபினியைக் (இரண்டுமூன்று குன்றுமணி எடை) கொடுத்தால் அதிஸாரம் அல்லது இரத்தக்கசிவு குறையக்கூடும்; அத்துடன் வெடியுப்பு கலந்த ஜலத்தைக்குடிக்கக் கொடுப்பதும், அல்லது அதை குதத்தின்மூலமாய் உட்செலுத்துவதும் நலமாம். பொறுக்க முடியாமலுண்டான தாபமானது வெடியுப்பு ஜலத்தால் சிறிது குறையத் தலைப்படும். பிறகு அடியில் கூறப்படும் கஷாயமானது முதல்வாரத்தில் ரோகிக்கு மிகவும் குணந்தரக் கூடியதென்று அநுபவத்தினால் அறியப்பட்டிருக்கின்றது:—

திராக்ஷை, சிந்திற்கொடி, கச்சோரம், கர்க்காடகசிருங்கி, கோரைக்கிழங்கு, இரத்த சந்தனம், சுக்கு, கடுகரோஹிணி, வட்டத்திருப்பி, நிலவேம்பு, காஞ்சொறி, வெட்டிவேர், அல்லிக்கிழங்கு, கொத்தமல்லிவிதை, குருவேர், கண்டங்கத்திரி, தாமரைக்கிழங்கு, வேப்பம் பட்டை இவற்றில் ஒவ்வொன்றையும் இரண்டு பலம் இடித்துச் சேர்த்து இரண்டுபடி ஜலத்தில் காய்ச்சி எட்டில் ஒருபங்காகக் குறைந்தபின் இறக்கி, வடிக்கட்டி சுத்தமான மட்பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, அடிக்கடி கால் அல்லது அரைக்கால் ஆழாக்குவிதம் கொடுத்துவரலாம். இக்கஷாயம் சரீரதாபத்தைத்தணிக்கும், தாஹத்தைக் குறைக்கும், குடல்களுக்குண்டான எரித்தலையும் வெ[illegible]டலையும் சமனப்படுத்தும், குடற்புண்களை ஆற்றும், புத்திமாறாட்டத்தையும் போக்கும். இக்கஷாயத்துடன் "ஸந்நிபாத பைரவி" யென்னும் குளிகையைச் சிறிது இழைத்துக்கொடுத்தால் ஸந்நிபாத மூண்டாவதற் கேற்பட்ட காரணமும் விலகும். (ஸந்நிபாத பைரவியென்பது ஆயுர்வேத வைத்தியர்களிடம் ஸாதாரணமாய்க் கிடைக்கும்; அல்லது தமிழ் வைத்தியர்க[illegible] பிறரும் ஜீவரக்ஷாம்ருதம் என்கிற நூலில் அல்லது சார்ங்கதர ஸம்ஹிதையில் இதன் விவரத்தைப் பார்க்கலாம்.)

இவ்விதம் செய்த[illegible] முதல்வாரம் [illegible]ததும் பிணியாளியின் சரீரம் சிறிது வெளுக்கிய நிலைமையுண்டா[illegible]கும். [illegible] பொரி முதலிய[illegible] கஞ்சியைக் க[illegible] கூடி உணவாகக்கொடு[illegible] வரலாம்.

வைத்திய கலாநிதி.

ஆனந்தரூப அடிமை.

THE SURGERY IN ANCIENT INDIA.

பண்டைக் காலத்தில் இந்தியரின் சஸ்திர சிகித்ஸை.

இவ்விஷயமாய் இம்மாதத்தில் ஆங்கிலத்திலும் தேசபாஷைகளிலுமுள்ள ஸமாசாரப் பத்திரிகைகளில் பொதுவாய் சில வியாஸங்கள் வெளிவந்திருப்பதை கலாநிதியைப் படிப்பவரில் சிலர் பார்த்திருக்கக்கூடும். ஆனால் இவ்விஷயம் வைத்தியசாஸ்திரங்களில் விசேஷமான பரிசயம் வாய்ந்தவர்களால் விசாரம் செய்யக்கூடியதானதால், ஸாதாரண ஸமாசாரப்பத்திரிகைகளில் வந்த விஷயங்களாலேயே வைத்தியர்களுக்கும் மற்றவருக்கும் திருப்தியுண்டாயிருக்க முடியில்லையென்க் கருதி இதைப்பற்றி நாம் சில விவரங்களைச் சுருக்கமாய் வரைய விரும்புகிறோம். டாக்டர் C. N. முகோபாத்தியாயர் என்பவர் பண்டைக் காலத்திய இந்தியரின் சஸ்திர சிகித்ஸையைப் பற்றி பெரிதாக ஒரு நூலெழுத, அதன் அருமையையறிந்த கல்கத்தா யூனிவர்ஸிடியார் அதைப் பிரசுரம் செய்தார்களாகையால், அநேகம்பத்திரிகைகள் இவ்விஷயத்தைப்பற்றி [illegible]தன் இஷ்டப்படி குறிப்புகளும் வியா[illegible]களும் எழுதின. டாக்டர் முகோபாத்தியாயர் இரண்டு ஸம்புடங்களடங்கிய இப்புத்தகத்[illegible] [illegible] மிகவும் சிரமப்பட்டிருக்[illegible] [illegible]; டாக்டர் P. C. ராய், [illegible] முதலி[illegible] இவரைப் [illegible]க்கிலும் இன்னும் விசேஷமாய் பரிச்ரமப்பட்டு விஷய விசாரஞ் செய்து நமது பிராசீனசஸ்திர சிகித்ஸை [illegible] நூல்கள் வரைந்து [illegible] புத்தகமெழுதுபவர்க்கு ஒருவாறு [illegible] இந்தியாவில் [illegible] யிருக்கின்றனர். ஆதிகாலத்தில் ஆரியர்கள் தமது சொந்த அறிவுனால் கண்டுபிடித்து அனுபவத்தில் சிகித்ஸாகிரமங்களுக்கு நன்குதவுமாறு ஏற்படுத்திய சஸ்திர யந்திரங்களைப்பற்றியும், மற்றும் காய சிகித்ஸையெனப்படும் ஸாமானிய ஔஷதப்ரயோகங்களால் செய்யப்படும் சிகித்ஸா முறைகளைப்பற்றியும் இதுவரையில் தற்காலத்திய பண்டிதர்களால் வரையப்பட்டு வெளிவந்துள்ள புத்தகங்களைப்போல் இன்னும் அநேகம் எழுதவேண்டியிருக்குமென்றே கூறுவோம்; ஏனெனில் இன்னும் ஆயுர்வேத நூல்களில் அபூர்வமானவை அநேகம் ஒவ்வோரிடங்களில் பதுங்கிக் கிடப்பதாகவும், அவையும் காலக்கிரமத்தில் கிடைத்தால் பண்டைக் காலத்திய சஸ்திர சிகித்ஸாதிகளைப்பற்றி அரிதும் அற்புதமுமான அநேக விஷயங்களை யுணரலாமென்றும் ஆயுர்வேத நூல்களைக் கசடறக் கற்றறிந்த பண்டிதரின் கொள்கை. இதற்கு முன் சிலகாலம் வரையிலும் (P. C. ராய் முதலியவர்கள் நூல்கள் எழுதியவரையிலும்) இப்பொழுது பிரஸித்தமாயிருக்கும் ஸுச்ருத ஸம்ஹிதை யென்கிற ஆயுர்வேதக் கிரந்தமே பிராசீன சஸ்திர சிகித்ஸைகளைக் குறிக்கும் ஒரு பிரமாண நூலாகக் கருதப்படலாயிற்று; இத்துடன் ருக்வேதத்திலுள்ள சில கண்டங்களும் இவ்விஷயத்திற்கு ஆதாரமாகக் கிடைத்தன. பின்னர் தற்காலத்திய படித்தறிந்த ஆயுர்வேத வைத்தியர்களும், ஆராய்ச்சி செய்வதில் ஆவலுள்ள வேறு சிலரும், முன்னால் சஸ்திரசிகித்ஸைக்கு மூலாதாரமாயிருந்த நூல்கள் இன்னும் அநேகம் இருந்தனவெனவும், அவற்றைக்கொண்டு சஸ்திர சிகித்ஸையில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மிகவும் ஆச்சரியகரமான திறமை இருந்ததென்று அனைவரும் நிச்சயிக்கலாமெனவும் விஷயங்களை விளக்கிக் கூறியிருக்கின்றனர். இப்பொழுது பிரஸித்தமாய் வெளிவந்திருக்கும் ஸுச்ருத ஸம்ஹிதையானது சரீரதத்துவங்களைப்பற்றியும், விசேஷமாக சஸ்திர சிகித்ஸைகளைப்பற்றியும் விவரிக்கின்றதாயினும், ஸுச்ருததந்த்ரம் அல்லது

விருத்த ஸுச்ருதம் என்கிற வெகு விரிவான வேறொரு நூல் தற்காலத்திலுள்ள ஸுச்ருதம் என்கிற ஸங்கிரஹநூல் எழுத ஆதாரமாயிருந்ததாயறிகிறோம். இப்பொழுதுள்ள ஸுச்ருத ஸம்ஹிதை இதைவிட மிகப் பிராசீனமான விருத்த ஸுச்ருததந்த்ரத்தின் சுருக்கமாயிருப்பதுடன், இதை ஸம்ஸ்காரம் செய்ய முயன்ற சில ஸாஹஸக்காரர்கள் சரீரதத்துவங்களைக் கசடறவுணராமல், தமக்குத் தோன்றியவாறு பிரத்தியக்ஷ விரோதமான சில விஷயங்களைச் சேர்த்தும், சில விஷயங்களை மாற்றியும் எழுதி விட்டதாய் அநேகம் பண்டிதர் அபிப்பிராயப்படுகின்றனர். சிவதாஸன், ஸ்ரீகண்டதத்தன், விஜயரக்ஷிதன் முதலியவர்கள் சக்ரதத்த ஸங்கிரஹம், மாதவநிதானம், ஸித்தயோகம் முதலிய வைத்திய நூல்களுக்கு எழுதிய வியாக்யானங்களில் விருத்தஸுச்ருதத்திலிருந்து அநேகம் விஷயங்களைப் பிரமாணமாய் எடுத்துக் கூறியிருப்பதைப் பார்த்தால், இப்பொழுதுள்ள ஸுச்ருத ஸம்ஹிதை எவ்விதத்திலும் விருத்த ஸுச்ருதத்தினும் வேறுபட்டதெனவும், விருத்த ஸுச்ருதமானது சரீரதத்துவங்களையும் சஸ்திர சிகித்ஸையையும் வெகு விரிவாகவும் பிரத்தியக்ஷாநுபவத்திற்கு இணங்கவும் விசதமாகவும் எடுத்துரைக்கும் அரிய நூலாக இருந்திருக்க வேண்டுமென்றும் தெரியவரும். ஆயுர்வேத நூல்களியற்றியவருள் வெகு ஸமீபகாலத்திலிருந்த சிவதாஸனுடைய காலம் வரையில் விருத்த ஸுச்ருதம் என்கிற நூல் அழியாமல் உபயோகத்திலிருந்து வந்ததாகவே அறியப்படுகிறது.

வைதரணதந்த்ரம் என்று சிறந்ததோர் கிரந்தம் சஸ்திர சிகித்ஸையைப்பற்றி முன்னால் ஏற்பட்டிருந்தது. அப்புத்தகமும் இப்பொழுது கிடைக்கவில்லையாயினும், ஸுச்ருதஸம்ஹிதை முதலியவற்றின் வியாக்யானங்களில் அவ் வைதரணதந்த்ரத்திலிருந்து எடுத்து உதஹரிக்கப்பட்ட அநேகம் விஷயங்களை இப்பொழுது நாம் பார்க்கக்கூடும். ஸுச்ருதத்தின் வியாக்யானத்தில் டல்லணாசாரியரால் எடுத்து வரையப்பட்டுள்ள வைதரணதந்த்ரத்தின் சில [illegible]யங்களைப் படித்தால், அக்காலத்தில் சரீரதத்துவத்திலும், சஸ்திர சிகித்ஸையிலும் ஆர்யர்களுக்கிருந்த அறிவு அபரிமிதமென விளங்கும். மூத்திரத்திலுள்ள சில வகையான க்ஷாரங்கள் அல்லது உப்புகள் உறைந்து விடுவதால், மூத்திர மார்க்கங்களில் கற்களைப்போல் அவ்வுறைந்து போன உப்புகள் அடைத்துக்கொண்டு 'அச்மரி' என்கிற மூத்திரவியாதி உண்டாகிறது; இவ்வியாதிக்கு சஸ்திரப்பிரயோகத்தினால் சிகித்ஸை செய்வதுண்டு. அப்பொழுது மூத்திராசயம் முதலிய மூத்திர மார்க்கங்களுடையவும், அவற்றிற்குச் சுற்றிலுமுள்ள மற்ற அவயவங்களுடையவும் அமைப்பின் தத்துவங்களை சஸ்திரசிகித்ஸகன் நன்கு அறிந்திருக்க வேண்டும். மஹாஸ்ரோதஸ் என்னும் பெருங்குடல் முடியுமிடத்தில் அதன் மேற்புறத்தில் நாபிக்குக் கீழ் வஸ்தியென்னும் மூத்திரப்பை அமைக்கப்பட்டிருக்கின்றது. ஸ்திரீகளுக்கு வஸ்தியின் அ[illegible]த்தில் கருப்பை என்னும் அவயவமுண்டு. இவ்வாறு பல அவயவங்களுக்கு இடையில் ஸம்பந்தப்பட்டுள்ள வஸ்தியென்னும் மூத்திரப்பையினுள் சஸ்திரத்தைச் செலுத்தும்போது, வஸ்தியின் அருகில் சிறிது உபாயமாய் சஸ்திரத்தை உயர்த்தி அச்மரியென்னும் கல்லை அதனால் மெதுவாய்ப் பற்றி வெளிப்படுத்தலாம்......" என்று இன்னும் இதைப்போன்ற அநேகம் விஷயங்கள் அந்நூலிலிருந்து எடுக்கப்பட்டு ஆங்காங்கு வியாக்யானக் கிரந்தங்களில் பிரமாணமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. விரணங்களைச் சுத்தி செய்து கட்டவேண்டிய உபாயங்கள் முதலியவைகளும், ஸுச்ருதஸம்ஹிதையில் [illegible]படாத இன்னும் பல சஸ்திரசிகித்ஸா முறைகளும் வைதரணதந்த்ரத்தில் கூறப்பட்டிருப்பதாயறிவதால் தற்காலத்திய ஸுச்ருதத்தைவிட அந்நூல் உருவத்திலும் மிகப் பெரிதாயிருக்க வேண்டுமென்றும் ஊஹிக்கிறோம்.

மேலும் பௌஷ்கலாவததந்த்ரம் என்று சஸ்திரசிகித்ஸா ப்ரதிபாதகமான மற்றொருநூலும்

முன்னால் பிரஸித்தி பெற்றிருந்ததாக சக்ரபாணியினால் வரையப்பெற்ற பானுமதி முதலிய வியாக்யானங்களின் மூலமாய் அறிகிறோம். இவைகளல்லாமல் ஸுச்ருத ஸம்ஹிதையின் வியாக்யானத்தில் டல்லணனும், மாதவநிதான வியாக்யானத்தில் விஜயரக்ஷிதன் முதலானவர்களும், சக்ரபாணியும் போஜதந்த்ரம் என்கிற ஆயுர்வேத நூலிலிருந்து அளவற்ற பத்தியங்களைப் பிரமாணமாய் எடுத்துக் கூறியிருப்பதை ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேத நூல்களைப் படித்தறிந்த வைத்தியர்கள் கவனித்திருக்கக் கூடும். இந்த நூல், சஸ்திர சிகித்ஸா ஸம்பந்தமான மற்ற எல்லா நூல்களிலும் விஷயங்களாலும், உருவத்தினாலும், உபயோகத்தினாலும் மிகப் பெரிதென்று விளங்குகின்றது; வெகு பிரஸித்தமாயிருந்த போஜராஜன் சஸ்திர சிகித்ஸா ஸம்பந்தமான இந்நூலுக்கு ஆசிரியனல்லவெனவும், ஸுச்ருதரென்னும் இருஷிக்கு ஸமானகாலத்திலிருந்த போஜருஷி யென்பவரால் மேற்படி நூல் இயற்றப்பட்டதென்றும் பலப் பிரமாணங்களால் அறியப்படுகிறது. ஆனால் தாராநகரத்திற்கு அதிபதியாயிருந்த போஜனால் 'ராஜமார்த்தாண்டம்' முதலிய வேறு சில சிறிய வைத்தியக்கிரந்தங்கள் வரையப்பட்டிருப்பது வாஸ்தவமே; அவை போஜ தந்த்ரத்திலும் மிகப் பிற்பட்டு இயற்றப்பெற்றவையாம். போஜதந்த்ரத்திலிருந்து ஆங்காங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ள பிரமாணச்லோகங்களையும் அவற்றின் பொருட்களையும் விவரித்தெழுதுவதென்றால் இங்கிடமில்லை.

இவையன்றி ஔபதேநவ தந்த்ரம் என்றும், ஔரப்ர தந்த்ரம் என்றும், கோபுராக்ஷித தந்த்ரம் என்றும், [illegible] தந்த்ரம் என்றும், பாலுகிதந்த்ரம் என்றும், கபில தந்த்ரம் என்றும் சஸ்திர சிகித்ஸா ஸம்பந்தமாய் வேறு பல புஸ்தகங்களும் முன்னால் வைத்தியர்களின் ஞானவிருத்தியின் பொருட்டு அறிவிற் சிறந்த முனிவர்களால் இயற்றப்பெற்று ஆயுர்வேத வைத்தியத்தில் சஸ்திரசிகித்ஸைக்கு மிக மேலான கௌரவத்தையுண்டாக்கி வந்தன. முள், ஆணி, கற்கள், மற்றும் பல வெளிப்பொருட்கள் சரீரத்திற் புகுந்து பாதையுண்டாக்குமாகையால் அவை 'சல்யங்கள்' என்று வழங்கப்பட்டன; பிறகு ஆயுதம் முதலியவற்றாலும், விழுவதாலும் சரீரத்தில் காயமுண்டாக, அவ்விரணத்தினுள் சீழுண்டாய் சல்யங்களைப் போலவே துன்பமளிப்பதைக் கருதி அவ்வித சீழ், எலும்புத்துண்டு முதலியவைகளும் 'சல்யங்கள்' என்றே வழங்கப்பட்டன, இவ்வித சல்யங்களை வெளிப்படுத்துவதற்காகச் சஸ்திரங்களையுபயோகித்து செய்யப்படும் சிகித்ஸையானது 'சல்யசிகித்ஸை' என்றும், இவ்வித சல்யசிகித்ஸையைக் கூறும் சாஸ்திரம் 'சல்யதந்த்ரங்கள்' எனவும் வழங்குப்பட்டு வந்தன.

பிறகு சஸ்திரசிகித்ஸையில் பரிசயம் அபிவ்ருத்தியாய் வந்ததில், அந்த சிகித்ஸையில் விசேஷமான சில பிரிவுகளையும் ஆர்யவைத்தியர்கள் ஏற்படுத்தினார்கள். அப்பிரிவுகளில் 'சாலாக்யதந்த்ரம்' என்பது ஒன்றும். ஒழுங்காக நீண்ட சிறு குச்சுகளைப் போன்ற கருவிகள் சலாகைகளாகும். கண்களிலும் காது முதலியவற்றிலும் ஔஷதமிடவும், அவற்றில் சஸ்திரங்களைக்கொண்டு சிகித்ஸை செய்யவும் பெரும்பாலும் பல மாதிரிகளான சலாகைகளை உபயோகிக்க வேண்டி வந்ததால், நேத்திரம் நாசி முதலியவற்றில் செய்ய வேண்டிய சஸ்திர சிகித்ஸையானது 'சாலாக்யம்' என்றும், அவ்விஷயத்தைப்பற்றி விவரிக்கும் சாஸ்திரம் 'சாலாக்யதந்த்ரம்' எனவும் வழங்கப்படலாயிற்று. சாலாக்யதந்த்ரத்தில் விசேஷ பரிசயமடைந்தவர்கள் பிரத்யேகமாக நேத்திரம் செவி முதலியவற்றின் ஸம்பந்தமான சஸ்திர சிகித்ஸைகளைப்பற்றி வெவ்வேறு கிரந்தங்களும் இயற்றினர். அவ்வித சாலாக்யதந்த்ரங்களில் மிகப் பிரதானமானது விதேஹதந்த்ரம் என்கிற நூலே; ஸுச்ருதஸம்ஹிதையின் இறுதியிற் கூறியுள்ள சாலாக்யசிகித்ஸைக்கு விதேஹதந்த்ரமே ஆதாரமாயிருந்ததென்று அறியப்படுகிறது. மூக்கு, காது நேத்திரம் இவற்றிலுண்டாகும் வியாதிகளைப்பற்றியும், அவற்றிற்கு

செய்ய வேண்டிய ஔஷதப்பிரயோகம் முக்கியமாய் சஸ்திரகர்மம முதலியதைப்பற்றியும் அவ்வநாதிகாலத்திலெழுதிய விதேஹதந்த்ரத்தில் விஷயங்கள் வெகு சாதுர்யமாய் விளக்கப்பட்டிருக்கின்றனவென்று, அந்தந்த வியாக்யான நூல்களிலும் வேறு சில மூலக்கிரந்தங்களிலும் அதிலிருந்தெடுக்கப்பட்ட பிரமாணச்லோகங்களைக் கொண்டு நன்கறியலாம். நிமி தந்த்ரம் என்று மற்றொரு சாலாக்ய தந்த்ரமும் இருந்ததாய் அறிகிறோம். ஆனால் நிமியென்பவர் ஜனகமஹாராஜருடைய கூடஸ்தர் எனவும், விதேஹதேசத்திய அரசனை நிமியென்பவரால் இயற்றப்பட்ட நிமிதந்த்ரமே விதேஹதந்த்ரமென்று வழங்கப்பட்டதாகவும் சிலரது கொள்கையிருந்தபோதிலும், சரகஸம்ஹிதையில் சாரீர ஸ்தானத்தில் 'இந்த்ரியாணீதி ஜநகோ வைதேஹ' என்று கூறியிருப்பதையும், டல்லணன் முதலிய வியாக்யானக்காரர்கள் 'நிமி தந்த்ரம்' என்றும், 'விதேஹ தந்த்ரம்' என்றும் ஆங்காங்கு பகுத்துக் கூறியிருப்பதையும், இன்னும் சில பிரமாணங்களையுங்கொண்டு ஜனகர் எழுதியது 'விதேஹ தந்த்ரம்' என்றும், நிமியென்பவர் இயற்றியது 'நிமிதந்த்ரம்' என்றும் வெவ்வேறாகக் கூறப்படுகிறதென்பது ஸித்தாந்தமான விஷயம். அல்லாமலும் கிருஷ்ணாத்ரேய தந்த்ரம், கராள தந்த்ரம், சௌநகதந்த்ரம், சக்ஷுஷ்ய தந்த்ரம், காங்காயந தந்த்ரம் என்று வேறு சில சாலாக்ய தந்த்ரங்களும் ஏற்பட்டிருந்தன. ஆனால் இவற்றுள் எதுவும் இப்பொழுது புத்தகரூபமாகக் கிடைப்பது அரிதாய்விட்டது. கீழ்க்கூறிய சஸ்திர சிகித்ஸா ஸம்பந்தமான கிரந்தங்களில் சில இன்றைக்கு 1500 வருஷங்களுக்கு முன்பாகவும், வேறு சில 2000 வருஷங்களுக்கு முன்பாகவும் எழுதப்பட்டவையாம். இவற்றின் அருமை பெருமைகளைப்பற்றி ஆங்கிலவைத்திய நிபுணர்களிலேயே பலர் மனதாறப்புகழ்ந்து அநேகம் நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கின்றாரெனில், வைத்தியசாஸ்திரங்களை நன்கு அப்யஸித்து, பிராசீனவைத்திய நூல்களின் ஸாரங்களைப் படித்தறிந்த இத்தேசத்திலுள்ள டாக்டர் முகோபாத்யாயர் முதலியவர்களைப் போன்றவர்கள் ஆயுர்வேதத்திலடங்கிய அவ்வித சஸ்திரசிகித்ஸா முறைகளைப் புகழ்ந்தெழுதாமலிருப்பதஸாத்தியமானதன்றோ?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன் இருஷிகளால் எழுதப்பட்ட நூல்கள் ஒரு பக்கமிருக்க, அதற்கும் அநேகம் ஆயிரம் வருஷங்களுக்குமுன் (உலகம் ஸ்ருஷ்டிக்கப்பட்டு 6000 வருஷங்கள் ஆயினவெனவும், ஆகவே 4000 வருஷங்களுக்குப் பிற்பட்டுதான் எதாவது படிப்பென்பது உலகத்தில் ஏற்பட்டிருக்குமென்றும் மேனாட்டாரில் சிலர் சொல்வதைக் கற்றறிந்த இந்தியர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்.) பிரம்மதேவன் ப்ராஹ்ம ஸம்ஹிதையென்றும், தக்ஷப்ராஜாபதி ப்ராஜாபதிதந்த்ரமென்றும், அச்வினீ தேவதைகள் அச்விஸம்ஹிதையென்றும், இந்திரன் வலபித் ஸம்ஹிதையென்றும் சில மேன்மைதங்கிய மஹாக் கிரந்தங்களை லோகாநுக்ரஹத்தின்பொருட்டு வெளியிட்டார்களென்பது ஆயுர்வேத பண்டிதர்கள் படித்த விஷயமே. ஆனால் நவீனநாகரிகரில் பலருக்கு இது ஒரு கட்டுக் கதையாகத் தோற்றுமென்பதில் ஸந்தேஹமில்லை. சரகஸம்ஹிதை முதலிய நூல்களியற்றியதற்கு முதலாசிரியராயிருந்த அக்னிவேசர் முதலானவர்களுக்கு வைத்தியசாஸ்திரத்தில் திடீரென்று பரிசயமுண்டாவதற்கு வழியில்லையென் ... இவர்களுக்கு முதலில் சாஸ்திராப்யாஸம் செய்துவைக்க பரத்வாஜர், அத்ரி முதலிய முனிவர்கள் இந்திரனிடம் சென்று வைத்திய சாஸ்திரோபதேசங்களைப் பெற்றனரெனவும் ஆயுர்வேதக் கிரந்தங்களும் புராணங்களும் ஒருமனதாய் மொழிவதையும் அங்கீகரிக்காமற்போனால், உலகத்தில் ஆயுர்வேத மென்கிற விஷயமே பரவியிருப்பதற்கு மார்க்கமில்லாமற்போயிருக்குமென்பதையும் அங்கீகரிக்க நேரிடுமென்று நவீனநாகரிகர்கள் ஆலோசிக்கவேண்டும். ஆயுர்வேத சாஸ்திரமும் ஆ...

அதிலடங்கிய சஸ்திர சிகித்ஸா முறையும் நமது மனத்தோற்றத்திற்கு மெட்டாத அவ்வளவு பண்டைக்காலமுதல் அபிவிருத்தியாய் வந்து, ஜனங்களுக்குண்டான பற்பல ஆபத்துக்களை அகற்றி [illegible]ாம் கூற வேண்டியிருக்கிறது.

முற்காலங்களிலும் வைத்தியசாஸ்திரம் கற்பவர் சரீரதத்துவத்திலும் நிபுணராயிருக்க வேண்டுமென்கிற நியமமும், அவ்விதம் சரீரதத்துவ மறிந்தபின்னரே சஸ்திர சிகித்ஸையில் முயற்சி செய்யலாமென்கிற ஏற்பாடுமிருந்துவந்தது. முற்கூறிய ஸுச்ருதம், வாக்படம் முதலிய பிராசீன வைத்தியக் கிரந்தங்களில் ஸாதாரணமான சிறிய சஸ்திர சிகித்ஸைகளும், விசேஷமான பெரிய சஸ்திர சிகித்ஸைகளும் கூறப்பட்டிருப்பது கவனிக்கக்கூடிய விஷயம். ஆதிகாலத்திய ஆயுர்வேத வைத்தியர்கள் உதரச்சேதம் (Laporatomy), உபயோகமில்லாமல் உபத்திரவமளிக்கக்கூடியவாறு சிதைவுண்ட கைகால்களை அறுத்துவிட்டு மற்ற அவயவங்களைக்காப்பது, குடல்களில் பண்ணக்கூடிய சஸ்திரசிகித்ஸை முதலிய மிகவும் கஷ்ட ஸாத்தியமான சல்ய சிகித்ஸைகளை இக்காலத்திய மேனாட்டு வைத்தியர்களைப்போலவே நிறைவேற்றி பெரும்புகழ் ஸம்பாதித்திருக்கின்றனர். இவ்வித சிகித்ஸைகளுக்கு அவசியமாயுள்ள அநேகவிதமான கருவிகளையும் ஆரியர்கள் வெகு திறமையுடன் ஸுலபமாய் அமைத்து, அவற்றை வெகு ஜாக்கிரதையாகவும் பலவித ஔஷத ஸம்பந்தமான முறைகளால் சுத்தமாக வைத்திருந்தார்களென்பதையும் ஸுச்ருதம் முதலிய நூல்கள் நன்கறிவிக்கின்றன. சரீரதத்துவங்களைப் பிரத்தியக்ஷமாய் கற்றறிவதற்கு முற்காலத்திய வைத்தியர்கள், முதலில், எவ்வித ரோகத்தினாலும் பீடிக்கப்படாமல், ஆகவே எவ்வவயவங்களும் எந்த தாக்கலும் கோளாறடையாமல் திடீரென்று இறந்துபோன மனிதரின் சவத்தை அறுத்து அந்தந்த அவயவங்கள் அமைந்திருக்கும் மாதிரிகளையும் மற்றும் அவற்றின் தத்துவங்களையும் கண்ணுங் கருத்துமாகப் பார்த்துவந்தார்களென்பதற்கு முன்னால் மொழியப்பட்ட நூல்களில் போதுமான பிரமாணங்கள் இல்லாமற் போகவில்லை. டாக்டர் ஹெர்னல் என்பவர் 'பண்டைக்காலத்திய இந்தியர்களின் வைத்தியம்' (Medicine of ancienl India) என்கிற தமது நூலில், கிறிஸ்துவுக்கு முன் 6-வது நூற்றாண்டிலேயே இந்தியாவில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு சரீரதத்துவத்திலும் மற்றும் பலவித சிகித்ஸாமுறையிலும் ஏற்பட்டிருந்த அறிவானது ஆச்சரியப்படும்படி அவ்வளவு அஸாதாரணமாயிருந்ததென்று மொழிந்திருக்கின்றார். சாரீர பத்மினீ, சாரீரவைத்யகம் என்று சரீரதத்துவ ஸம்பந்தமான வேறு சில ஆயுர்வேதக் கிரந்தங்களுண்டென்றும், அவற்றில் சாரீர பத்மினீயென்பது 10-வது நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகத் தெரியவருகிறதென்றும் டாக்டர் P. கார்டியெர் என்பவர் வெகு ஸமீபகாலத்திலியற்றிய தமது நூலில் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

இவ்வாறு சரீரதத்துவங்களிலும், சஸ்திர சிகித்ஸையிலும் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அறிவும் அநுபவமும் மேன்மேலும் விருத்தியடைந்து வருங்கால், காலக்கிரமத்தில் பௌத்த மதஸ்தருடைய வெகு தீவ்ரமான மதக்கோட்பாட்டின்படி, சரீரதத்துவ மறிவதற்கு மரித்துப்போன மானிடசரீரமும் கிடைப்பது அரிதாய்விட்டது. 2200 வருஷங்களுக்குமுன் செங்கோல் செலுத்திய அசோக சக்கிரவர்த்தியினால், எக்காரணத்தைக்கொண்டும் மனித சரீரம் அறுக்கப்படக் கூடாதென ஓர் இராஜாஞ்ஞையும் பிறப்பிக்கப்பட்டதென்பதை இராயல் ஏஷ்யாடிக் ஸொஸைடியாருடைய பத்திரிகையில் 12-வது பகுதியில் விவரமாகக் காணலாம். இங்கிலாந்து முதலான நாடுகளிலும் வெகு நாளளவும் நாகரிகத்திற்கும் மதக்கோட்பாட்டிற்கும் மனிதசரீரத்தை அறுப்பது அநுசிதமென்று தடுக்கப்பட்டு வந்ததாகவே டாக்டர் புஷ்மான் முதலியவர்கள் கூறியிருக்கின்ற

னர். பிறகு வைதிகாசாரங்களில் மிகவும் ஊக்கத்துடன் பிரவ்ருத்தித்த பிராம்மணர்கள் அங்ஙனம் சவங்களை அறுத்து வருவதைப் பார்க்க விரும்பாமல் பற்பல [illegible]பந்தனைகளை யுண்டு பண்ணி, சவபரிசோதனைக்கு மனித சரீரம் கிடைக்காமலும், கிடைத்து அக்காரியத்திற் பிரவிருத்திப்பவரை ஜாதியிற் சேர்க்காமலும் பலவாறு நிர்ப்பந்தங்களுண்டாக்கியதால், பிற்காலத்தில் அவ்வித சாஸ்திரப்பயிற்சியின் முறையே விசேஷமாகக் குறையத் தொடங்கிற்று. அப்பால் சில மஹம்மதிய அரசர்கள் இந்தியாவைக் கைப்பற்றி ஆண்டு வருகையில், ஆயுர்வேத சாஸ்திரமே [illegible]ப்யஸிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வந்ததுடன், அருமையான அளவற்ற ஆயுர்வேத நூல்களும் பலவா[illegible] அபஹரிக்கப்பட்டும் [illegible]ழிக்கப்பட்டுப் போயினவென்றும் கூறுகின்றனர். ஆனால் அரேபியா, கிரீஸ், ஈஜிப்ட் முதலான தேசாந்தரங்களுக்கு இந்தியாவிலுண்டான ஆயுர்வேத நூல்களில் அநேகம் கொண்டு போகப் பட்டனவென்பதும், அத்தேசங்களிலும் மற்றும் ரோம் முதலான விடங்களிலும் அந்தந்த பாஷையில் இத்தேசத்திய ஆயுர்வேத வைத்தியநூல்கள் [illegible] பெயர்க்கப் பட்டு அத்தேசங்களில் வைத்தியமுறைகள் ஏற்படுவதற்கு இவை ஆதாரமாயிருந்தன வென்றும் மொழிபவரை மறுக்க [illegible]வொரு மாகாது. ப்ரொபஸர் ஹீரென் [illegible]ன்பவருடைய 'ஹிஸ்டாரிகல் ரிஸெர்ச்' என்கிற நூலில் "ஆசியா கண்டத்திலுள்ள மற்ற நாடுகள் மாத்திரமேயல்ல, மேல்திசையிலுள் எல்லாத்தேசங்களுமே அநேகசாஸ்திர ஸம்பந்தமாகவும் மத ஸம்பந்தமாகவுமுள்ள அறிவை அகிலவழிகளிலும் இந்தியாவினிடமிருந்தே கிரஹித்துக் கொண்டன," என்று அவர் வரைந்திருக்கின்றார். "க்ரீஸ் தேசத்தவர் இந்தியர்களுடைய புராணங்களையும், இதிஹாஸங்களையும், மற்றும் வேதாதிகளையும் பார்த்து, அத்தேசத்தில் இதேவிதமாய் (சிறிது மாத்திரம் விஷ[illegible]கள் மாறு படுமாறுச் செய்து) அநேகம் புத்தகங்களை யெழுதிக்கொண்டதால், கிரீஸ் தேசத்தவர் இந்தியாவுக்கு நன்றி செலுத்தக்கடமைப் பட்டவராவர்." என்று மிஸ்டர் போகாக் என்பவரும் உண்மையை [illegible]த்து விளக்கியிருக்கின்றார். [illegible]ண்டெர் என்பவன், இந்தியாவின் மீது படையெடுத்துவந்தபோது இந்தியர்களுக்கு விஷஸம்பந்தமான சிகித்ஸைகளைக் கூறும் 'அகத தந்த்ரம்' என்கிற சாஸ்திரத்திலும், மற்றுமுள்ள இதர சாஸ்திரங்களிலும் இந்தியர்களுக்கு ஏற்பட்டிருந்த அஸாதாரணமான அறிவை [illegible] மெச்[illegible]த்து, அவ்விந்தியர்களில் [illegible]ரை தனக்குந் தன்னைச்சேர்ந்த . ஸைனியங் முதலானவற்றிற்கும் வைத்தியஞ் செய்து உதவி புரியுமாறு உத்தியோகஸ்தர்களாக அமைத்துக்கொண்ட விஷயமும், அதுமுதல் அநேகம் கிரந்தங்களும் பொருளும் இந்தியாவிலிருந்து கொள்ளையிடப்பட்டு அழிந்து போயினவென்பதும், கஸ்னி மஹம்மத்முதலான மகம்மதிய அரசர்களுடைய காலங்களில் இந்தியரின் பிராசீன சாஸ்திரங்களும் நாகரிகச்சின்னங்களும் அலங்கோலமாய் விட்டனவென்பதும் சரித்திரங்களைப் படிப்பவருக்குத் தெரியாத விஷயமல்ல. பிறகு அக்பர் சக்கிரவர்த்தி, ஷாஜஹான் முதலிய தர்மப்பிரபுக்கள் அரசாண்ட காலத்தில் மீண்டும் தேசம் [illegible] அமைதி பெற்று, அழிந்துபோனதுபோக [illegible]தா ஸாதாரணமான சில சாஸ்திரங்களையும் கலைகளையும் பற்றிய பண்டைக்காலத்திய சில நூல்கள் உலகில்தங்கியிருக்க வகையேற்பட்டது. அக்கா[illegible]தில் ஒவ்வொரு சாஸ்திரமும் அ[illegible]டதுபோலவே ஆயுர்வேத [illegible]ர்வ நூல்களுங்கூட கொள்[illegible] வேறு பலவகையில [illegible] யின வாகையால் [illegible] ரின் மஹிமை[illegible] வேத ஸம்ஹிதை, பேள ஸம்ஹி[illegible] ஸம்ஹிதை, [illegible] ஹிதை, க்ஷார[illegible] ஸம்ஹிதை முதலிய [illegible] வும் விஸ்த[illegible] ஆயுர்வேத [illegible]

இருந்தவிடம் தெரியாமற்போய், பிற்காலத்
திய இருஷிகளாலும், மற்றும் பண்டிதர்களா
லும் வரையப்பெற்ற சில சிறிய ஸம்ஹிதை
கள், வேறு சில ஸக்கிரந்தங்கள் இவை
மட்டுமே உலகில் மிஞ்சி இப்பொழுது முற்
காலத்திய ஆயுர்வேத வைத்தியர்களின் பிரபா
வத்தை ஒருவாறு ஊகித்தறிய உதவிபுரிகின்
றன. இப்பொழுது நமது கண்களுக்குப்
புலப்படும் கிரந்தங்கள் வெகு சொற்பமாகவும்,
காதால் கேட்கப்படுபவை அளவிறந்தவையா
யிருப்பதை நோக்க, மிகவும் உபயோக
முள்ள அரிய [illegible] அன்னியநாட்டாரால்
அபஹரிக்கப்பட்டு, இவற்றின் மூலமாய் பிற
நாட்டார் நாகரிக மடையவும், இந்தியநாட்
டின் பண்டைக்காலங் கொண்டுள்ள மஹிமை
மறைந்துபோகவும் நேரிட்டது என்றறிகிறோம்.
இந்தியர்கள் என்றைக்கும் தொன்றுதொட்டு
இவ்வித சாஸ்திரங்களை ஆவலுடன் பயின்று,
அநேகம் புதுமுறைகளைக் கண்டறிந்து, பற்
பல நூல்களியற்றி, மிகமேலான நாகரிகம்
வாய்ந்து வந்தார்களென்கிற விஷயம் மேற்
கூறிய காரணங்களால் உள்ளங்கை நெல்லிக்
கனிபோல் நன்கு விளங்குகையிலும், இந்தியர்
களுக்கு அவ்வித கௌரவமேற்பட்டிருப்ப
தையும் ஸகிக்க [illegible]யாத சில பத்திரிகைகள்
இந்தியர் [illegible]சத்தவர் இவ்விருவருமே
வேறொரு தேசத்தாரிடமிருந்து வைத்தியங்
களைக் கற்றிருக்கவேண்டுமென்று குறிப்பிடுவ
தானது அஸூயையினலுண்டான மொழியே
[illegible], வாஸ்தவாம்சத்தை யெடுத்துரைப்பவ
[illegible] கம்பீரமான அபிப்பிராயத்தைப்
[illegible] [illegible]ந்தவர்களால் ஏற்றுக்கொள்
[illegible] [illegible]மென்பதில் ஐயமொன்று
[illegible] [illegible] மத்தியகாலத்தில்
[illegible] [illegible] நூல்கள் அழியத்
[illegible] பிறகு இந்நூல்களை ஆதாரமாகக்
[illegible] [illegible]களில் ஏற்பட்ட வைத்
[illegible] ஆயுர்வேதமென்கிற பெய
[illegible] [illegible] வைத்தியமுறை
[illegible] [illegible] இந்தியாவில் காலக்கிர
மத்தில் வியாபித்து, இராஜாங்கத்தாரின் ஆதர
வைப் பெற்று அபிவிருத்தியாய்வந்தன; ஆயுர்
வேத வைத்தியமுறை இராஜாங்கத்தாரால்
முற்றிலும் அநாதரவு செய்யப்பட்டும்வந்தது;
இங்ஙனம் நேரிட்டிருந்த போதிலும் அதற்
குண்டான ஒப்புயர்வற்ற இயற்கை மஹி
மையினல் ஸம்ஸ்கிருத மறிந்த ஆயுர்வேத
வைத்தியர்களுக்கு மட்டுமேயல்ல, பக்ஷபாத
மில்லாமல் குணதோஷ விசாரம் செய்யும் அந்
நிய வைத்தியர்களுக்கும் இவ்வாயுர்வேதவைத்
திய நூல்களிலும், அதிலடங்கிய சஸ்திர சிகித்
ஸாக் கிரமங்களிலும் விசேஷமான கௌரவ
புத்தி ஏற்படுவதில் என்ன வியப்பு?

WHOOPING COUGH.

கக்குவான்-இருமல்.

இந்த நோய், ஸாதாரணமாய் நுண்ணுயிர்களால் (germs) உண்டாகும் வியாதிகளில் ஒன்று; ஆகவே இது தொற்றுவியாதிகளைச் சேர்ந்தது. இது வெகு சீக்கிரத்தில் ஒரு பிணியாளியிடமிருந்து மற்றொருவரிடம் பரவி தனது துர்க்குணங்களைக் காட்டும்.

இதுவரையிலும் இவ்வியாதி பரவாமலிருக்கவேண்டிய விஷயத்தில் ஒருவராலும் தகுந்த கவனம் செலுத்தப்படவில்லை. [illegible]தம் அலக்ஷியம் பாராட்டுவதற்குக் காரணம், இவ்வியாதி உயிருக்குத் தீங்கு விளைவிக்காதென்கிற ஸாதாரண கொள்கையே யாம். குழந்தைப் பருவத்தில் இவ்வியாதி எளிதில் வரக்கூடிய தென்றும், அவ்விதமே எளிதில் சிகித்ஸையின்றி நிவ்ருத்தியாகக்கூடியதென்றும் பெரும்பாலோர் கருதுகின்றனர். இவ்வியாதி இளம்பிராயத்தில் உண்டாய் நிவ்ருத்தியாவதால் குழந்தைகளின் பீடை கழிந்து ஆரோக்கியம் விருத்தியாவதாகவும் சிலர் அபிப்ராயப்படுகின்றனர். நாம் நன்றாக ஆராய்ச்சி செய்து நோக்குவோமானல், இது ஸாதாரணமாய் உண்டாய் நிவ்ருத்தியாவதாக நினைப்பதற்குப் பதிலாக மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடியதென்றே நிச்சயிக்கவேண்டிவருகிறது. குழந்தைகளைப் பெற்ற தாய் தந்தையர் அவர்களுடைய சிறிய பிள்ளைகளுக்குக் கொடிய கக்கிருமல் வந்து அவஸ்தைப்படுவதைப் பார்த்து மனம் ஸஹிப்பது இயலாத காரியமென்றே எமது துணிபு.

[illegible]ஸமீபத்தில் வைத்திய சாஸ்திர ஸம்பந்தமான ஆராய்ச்சி செய்வதில் அதிகாரம் பெற்ற ஒரு சாஸ்திர

னிபுணர் தன்னிடம் சிகித்ஸைக்குவரும் ரோகிகளைப் பரிக்ஷித்துப் பிரதானமான சில ரோகங்களை மாத்திரம் அப்போதைக்கப்போது குறிப்பிட்டு நுட்பமாய் கவனித்து வந்ததில், கக்குவானைப்பற்றி அவர் ஒரு விர்த்தாரணம் செய்து, அதன் [illegible]லையை வெளியிட்டாரென்று 'ஹெரால்ட் ஆப் ஹெல்த்' என்கிற வைத்தியப் பத்திரிகை கூறுகின்றது. மேலும் அப்பரிசோதகர், மஸூரிகாஜ்வரம் (Scarlet fever), களசுண்டியென்கிற குரல்வளையிற் காணும் ஒருவித வியாதி (diphtheria), கக்குவான் (whooping cough) இம்மூன்று ரோகங்களாலும் இறந்துபோனவர்களைப் பற்றி ஒரு கணக்கு வைத்திருந்தார். அவ்விதம் கணக்குப் பார்த்ததில் இம்மூன்று வியாதிகளாலும் சற்றேறக்குறைய ஒரே அளவாக மரணம் [illegible]த்ததாகத் தெரியவந்ததாம். அவற்றுள் மஸூரிகா ஜ்வரம் வெகு அதிகமாய் பிராணாபாய முண்டாக்கியதாகவும், அதற்கடுத்தபடி கக்குவான் உயிர்ச்சேத முண்டாக்கியதாகவும், களசுண்டியினால் மரித்தவரின் தொகை மூன்றாவதாக இருந்ததென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே களசுண்டியென்னும் குரல்வளையிற் காணும் தாபனரோகத்தைவிட கக்குவான் மிகவும் அபாயகரமானதாக அறியப்படுகிறதென்று அவர் கூறியிருக்கிறார். ஆகையினால் அவர் முடிவாகச் சொல்வதென்னவென்றால், ஒரு தாய் தன் குழந்தைக்குக் குரல்வளைத்தாபன ரோகம் வராதபடி அதைக் காப்பதற்கு எவ்வளவு கவலையெடுத்துக் கொள்ளுவளோ அதைவிட அதிக கவலை கக்கிருமல் [illegible]தபடி காப்பதற்கும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதே.

கக்குவானானது, பெரும்பாலும் பாற்பற்கள் முளைத்து வளர்ந்து அதற்கடுத்த இதர பற்கள் முளைக்கும் பருவத்தில் உண்டாவதியல்பு. ஆனால் [illegible]ர்களுக்கு முற்றிலும் இவ்வியாதி உண்டாகாதென்பதற்கில்லை. குழந்தைப் பருவத்தில் வராமலிருந்தால் பிறகு வாலிபப் பருவத்தில் ஒரு ஸமயம் அரிதாக சிலருக்கு இவ்வியாதி உற்பத்தியாகலாம். ஆனாலும் குழந்தைகளைப்போல் பெரியவர்கள் இதனால் அவ்வளவு துன்பமனுபவிக்கமாட்டார். இவ்வியாதியை ஒருமுறை அனுபவித்தவர் மறுபடியும் இதற்குப் பெரும்பாலும் ஆளாவதில்லை. குழந்தைகளின் ச்வாஸாசயச் சதைகள் வெகு கோமளமாகவும் ஸாரமுள்ளனவாகவு மிருப்பதால், இவ்வியாதியானது அவ்வவயவத்தின் தாதுக்களை எளிதில் சீரழியச் செய்து, காஸத்துடன் கூடிய ச்லேஷ்மாஸஜ்வரம் (Broncho-pneumonia) உண்டாய் அவற்றை இன்னும் அதிகமாகக் கோளாறடையச் செய்கின்றது; மார்பும் கக்கிருமலாலான அதிக ஆயாஸத்தைத் தாங்கக்கூடாததாயிருக்கின்றது.

விசேஷமாகத் தீங்கு விளைவிக்கும் வியாதிகளைத் தடுப்பதற்காக முன் ஜாக்கிரதையாயிருக்க நாம் தகுந்த ஏற்பாடுகள் செய்து வருவதுபோல் இவ்வியாதிக்கும் அவ்வித ஏற்பாடுகள் செய்வது அவசியம். கக்கிருமலையுடைய குழந்தைகளை இதர குழந்தைகளுடன் விளையாடவிடக்கூடாது; மேலும் எவ்விடத்தில் சிறுவர்கள் இவ்வியாதியினால் வருந்துவதாகத் தெரியவருகிறதோ அவ்விடத்திற்கு நமது குழந்தைகளையும் அழைத்தேகக் கூடாது. வீட்டில் [illegible]வது இக்கோயுண்டானால், அவரைக் [illegible] மற்ற[illegible] கூடயிராதபடி [illegible]ரத்தில் [illegible] விலக்கியிருக்கலாம். குரல்வளையிற் காணும் களசுண்டியென்[illegible] [illegible]பன ரோகத்தைத் தடுப்பதற்காகவும், கக்குவானைத் த[illegible]தற்காகவும், இவ்வித வியாதிநாசமேயே வருத்தும் சில ஜந்துகளின் உடலிலிருந்து ஒருவித சீரம் (Anti-whooping cough serum) எடுத்து, அதை அம்மைக் குத்தவதுபோல் சரீரத்திற்குள் ஏற்றிவரலாமென்று மேனாட்டு வைத்தியர்களில் சிலரது [illegible]ன்கை, ஏதோ சில வைத்தியர்கள் அவ்விதம் [illegible]யப்படுகிறார்களேயன்றி, உலகத்தில் இவ்விஷயம் அகிலவைத்தியர்களாலும் அங்கீகரிக்கப்படும் [illegible] அவ்வளவு திருப்திகரமான பலனைக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

ஒரு குழந்தை இவ்வியாதியினால் தாக்கப்பட்ட நாள் முதல், இவ்வியாதியின் குறிகள் [illegible]டையாயுண்டாகும் வரையிலுமுள்ள அக்கால[illegible] அடைகிடக்கும் காலம் (Incubation period) என்[illegible]யர்; இந்நிலைமை ஏழுமுதல் பத்துநாள் வரையில் நீடிக்கும். இதற்கு விசேஷமான குறிகளென்பதற்கும் மூன்று நிலைமைகளுண்டு; அவையாவன:—கபம் விருத்தியாகும் நிலைமை, வியாதி பிரகோபநிலைமை, உபசம நிலைமை. ஸாதாரண ஜலதோஷம்போல் தோற்றும் நிலைமை கபம் விருத்தியாகும் நிலைமை [illegible] [illegible]ண்டாய் வியாதியின் குறிகள் கா[illegible]ம் நிலைமை வியாதி பிரகோப நிலைமையெனவும், [illegible] சிறுகச் சிறுகக் குறைந்து[illegible] நிலைமை உபசம நிலைமையென்றும் கூறப்படும். முதலில் இவ்வியாதி வெகு ஸாமானியமான ஜலதோஷம்போலுற்பத்தியாவதால் இதன் இரண்டாவது நிலைமையில்தான் நமது குழந்தைகளுக்குக் கக்கிருமல் உற்பத்தியானதாகத் தாய்மார் அறிவது [illegible]கம். [illegible]பம் விருத்தியாதலென்னும் முதல் [illegible]யானது சுமார் இரண்டுவாரம்

வரையில் நீடிக்கும். வியாதி பிரகோப நிலைமையானது அதன் தன்மையிலும் கால அளவிலும் பலவாறு வித்தியாஸப்படுகிறது. இந்நிலைமை பொதுவாக ஐந்து முதல் எழுவாரம் வரையில் சிறுவர்களை இரவிலும் பகலிலும் ஓய்வின்றி வருந்தச்செய்யும்; இருமலானது தினத்திற்குப் பத்துமுதல் காற்பத்தெட்டுமுறை வரையில் உண்டாவதுண்டு. காலையிலிருந்து இரவு வரையில் அது தீவ்ரமாய் விருத்தியாகும். இத்தருணத்தில் மூச்சுத் திணறுவதுபோல் இழுப்புண்டாய், முகம் ஊதிப்போய், கண்கள் விண்டு விழும் போல் ஆய்விடும்; மூக்கிலிருந்து சளி ஒழுகிக்கொண்டிருக்கும். மார்பு [illegible] விக்கங்கொண்ட[illegible] விருக்கும். இந்நிலைமையில் [illegible] புஜித்த உணவுகள் அனைத்தும் குடலில் [illegible]காமல் இரண்டொரு இருமலில் வெளிவந்துவிடும். இரவில் இதன் கொடுமை சில குழந்தைகளால் பொறுக்கக் கூடாததாகும். இவ்விதம் சுமார் எழெட்டுவாரங்கள் [illegible], வியாதியானது குறையத் தலைப்படும். அப்பொழுது இழுப்பு [illegible]மமாகக் குறைவதுடன், அதனாலுண்டாகும் கஷ்டமும் மெள்ள மெள்ள நிவ்ருத்தியாகும். இந்நிலைமை சுமார் ஒரு மாதம் நீடிக்கலாம். ஆகவே இவ்வியாதியானது ஆரம்ப முதல் சுமார் பன்னிரண்டு வாரங்களளவும் நீடித்துப் போர[illegible]யதாயிருக்கின்றது. இந்தியாவில் சிலருக்கு [illegible]மாதம் வரையிலும் இவ்வியாதி நிலைத்திருக்குமென்று சில பரிசோதனைகளால் அறியப்படுகிறது. சி[illegible]ஸ்களில் மூன்று[illegible] உபசம நிலைமை நிவ்ருத்தியான பிறகு இரண்டொரு வருஷம் கழித்துப் பதிதாக மீண்[illegible] ஜலதோஷம் உற்பத்தியாய் இழுப்புடன் கூடிய இருமல் உண்டாவதுண்டு; இது முன்னுண்டான கக்கிருமலின் குறியுடையதானாலும், அவ்விதம் [illegible]மான கஷ்டத்தை யுண்டுபண்ணுவதில்லை.

இவ்வியாதிக்குச் சிகித்ஸை செய்யும் முறை:—ஒரு குழந்தை இப்பிணியால் வருந்தினாலும் அதை இதே [illegible] இதர குழந்தைகள் விளையாடுமிடத்தில் [illegible] போகக்கூடாது; குளிர் காற்றில் இப்பிணியுள்ள குழந்தைகளை விட்டுவைப்பது தகாது; தொண்டைக்குள்ளிருந்து வரும் [illegible]தை அப்போதைக்கப்போது [illegible] சொல்லவேண்டும்; இருமலைக் குறைப்பதற்காக [illegible] மார்ச்சளியை இளகமாகச் செய்து அதை எளிதில் வெளிவரச் செய்யவேண்டும்; மென்மேலும் [illegible] விருத்தியாகாதபடி அதை [illegible] அவசியம்; புஜித்த ஆஹாரம் [illegible] தாய் குழந்தை உணவின் [illegible] இன்னும் வருந்துமா[illegible]; அவ்விதம் அடிக்கடி ஆஹாரம் வாந்தியாகாதபடி அதைக் கவலையுடன் கவனிக்கவேண்டும். இந்த ரோகம் உபசம நிலைமையடையுங்கால் குளிர்காற்று முதலியவற்றின் ஸம்பந்தத்தால் மீண்டும் திருப்பிக்கொண்டால், சில கேஸ்களில் அபாயகரமான முடிவடைவதாகத் தெரிய வருகிறது; ஆகவே இரண்டாமுறை இவ்வியாதி திருப்பிக்கொள்ளாதபடி பிணியாளிக்கு எச்சரிக்கை செய்யவேண்டியது முக்கியமான விஷயம்.

இரவிலும் பகலிலும் உடற்சூடு ஒரே நிலைமையிலிருக்குமாறு தகுந்த முயற்சி செய்தால் இழுப்புடன் கூடிய இருமல் அவ்வளவு அதிகமாயுண்டாகாது. இரவில் குழந்தை படுக்கப்[illegible]யில் மாரிலும் முதுகிலும் சூடாக ஒற்றிடம் கொடுத்தால், மார்புக்குள் கபம் திரவமாகப் போய் எளிதாக வெளிவரக் கூடுமாகையால் இருமலும் குறைவு பெறும். புஜித்த ஆஹாரம் ஒரு முறை [illegible]யாய்விட்டால், மறுபடியும் இருமலுண்டா[illegible]குச் சிறிது நேரம் செல்லுமாகையால் அதற்குள் சீக்கிரம் ஜீர்ணமாகக்கூடிய திரவமான கஞ்சி முதலிய உணவுகளை உடனே கொடுக்கவேண்டும்; இதற்கு பால், வெகு திரவமான கஞ்சியினங்கள், சில பழவர்க்கங்கள் தகுந்தவையாகும். குழந்தைகளுக்கு வருத்தம், திகில், கோபம் இவற்றை உண்டாக்கக்கூடாது; அவற்றால் திடீரென்று இழுப்பும் இருமலும் அதிகமாயுண்டாய்விடும்; சில ஸமயம் அக்காரணங்களால் அழத்தொடங்கி, அதன்மேல் இழுப்புமுண்டாய் மூச்சுத்திணறி அபாயம் நேரிடும்படியான கஷ்ட நிலைமையும் சில குழந்தைகளுக்கு ஸம்பவிப்பதுண்டு.

ஔஷதங்களைக் கொண்டு இதை சிகித்ஸை செய்வது சிறிது கஷ்டமாகவே இருக்கிறது. ஆகிலும், அதிமதுரச சூர்ணத்தை வேளைக்கு 5-குன்றுமணியெடைவீதம் தினத்திற்கு நாலைந்து தடவை கொடுத்தால் கபம் உற்பத்தியாவது குறையும். கர்க்காடக சிருங்கியின் சூர்ணமும், கருவாப்பட்டைத் தூளும் ஸமபாகமாகக் கலந்து ஒரு தேக்கரண்டியளவு அதிமதுர[illegible]னுடன் சேர்த்து உபயோகித்தால் இருமலையும் இழு[illegible] தணிக்கும். இவ்வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்களை (germs) அழிப்பதற்காக மேனாட்டு வைத்தியர் சிலர் கொய்னாவையும், அயோடைன் என்கிற ஔஷதத்தையும் கொடுப்பதுண்டு. இவ்வித ஔஷதங்கள் இவ்வியாதியில் பல ஸமயங்களில் குணத்தா[illegible]வென்றாலும், தகுந்த அனுபவமுள்ள வைத்தியர்களின் அனுமதியின்பேரில் இவற்றை உபயோகிப்பது நலம். ஏனெனில், இவ்வியாதி ஔஷத பிரயோகத்திற்கு வசப்படுவது கஷ்டமாயிருப்பதால், அந்தந்த நிலைமைகளையும், கால தேசாதிகளையும் அனுஸரித்து இதற்கு சிகித்ஸை செய்யவேண்டியிருக்கிறது. எது எவ்விதமிருந்தபோதிலும், நல்ல போஷணையுண்டுபண்ணும் சிறந்த உணவுகளைக் கொடுத்து, சுத்தமான காற்றுள்ள நிர்மலமான பிரதேசத்தில் இவ்வியாதியுள்ள குழந்தைகளை உத்ஸாஹத்துடன் வைத்திருப்பதே இதற்கு முற்றிலும் ஏற்ற சிகித்ஸையாகுமென்பதில் ஸந்தேஹமில்லை.

THE HYDROPATHIC SYSTEM OF TREATMENT.

ஜலத்தைக்கொண்டு செய்யப்படும் ஒரு சிகித்ஸா முறை.

ஜலத்தைப் பல வகைகளில் உபயோகித்து வியாதிகளை ஸ்வஸ்த்தம் செய்வதற்கான ஒருவித முறை ஆங்கிலத்தில் 'ஹைட்ரோ பதி' எனப்படும். 1826-ம் வருஷத்தில் வின்ஸென்ஸ் ப்ரீஸ்நிட்ஸ் (Vincez Priessnitz) என்கிற ஒருவரால் இந்த சிகித்ஸாமுறை கண்டுபிடிக்கப்பட்டது. அப்பொழுது மேற்படி ப்ரீஸ்நிட்ஸ் என்பவரால் ஆஸ்டிரியாவில் ஸிலேஷியா என்கிற மாகாணத்திலுள்ள க்ராபென்பர்க் (Grafen burg) என்கிற தனது ஸொந்த ஊரில் இவ்வித சிகித்ஸை செய்வதற்கேற்ற ஒரு வைத்தியசாலை முதலில் ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு சீக்கிரத்திலேயே இந்த முறை பலவிடங்களிலும் அத்தேசத்தில் வியாபிக்கத் தொடங்கி, இப்பொழுது இங்கிலாந்து முதலான விடங்களிலும் இவ்வித சிகித்ஸைக்கென்று பெரிதான அநேகம் ஸ்த்தாபனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த முறைப்படி சிகித்ஸை செய்துகொண்டவர்கள், வேறு எவ்வித சிகித்ஸையையும் கொண்டாடமாட்டார்களென்றும், பற்பல பிணிகளால் பீடிக்கப் பெற்ற பெரும்பான்மையான ஜனங்கள் இதனால் திருப்திகரமான ஆரோக்கிய நிலைமையைப் பெற்றிருக்கின்றனரெனவும் கேள்விப்படுகிறோம். முக்கியமாய் இம்முறையானது, அஜீர்ண ஸம்பந்தமான வயிற்றுக் கோளாறுகளையும், வாயுஸம்பந்தமான வியாதிகளையும் மற்றும் பலவிதங்களில் சீரழிந்த சரீரநிலைமைகளையும், வியாயாம மென்னும் தேஹப்பயிற்சி யில்லாமையால் குன்றிப்போன தேஹவலிமையையும் சரிப்படுத்துவதில் நிகரில்லாத தென்று அதில் அபிமானமுள்ள வைத்தியர்கள் புகழ்கின்றனர். உணவு முதலியவற்றை வெவ்வேறு விதத்தில் உட்கொள்ளச் சொல்லியும், அவற்றில் வழக்கமான விதிக்கு மாறாக பத்தியக் கிரமங்களை யநுஸரித்து நடக்கச் செய்தும், ஔஷதங்களை உட்செலுத்தியும் செய்த சிகித்ஸாமுறைகள் முதலானதினும் இந்த சிகித்ஸையானது குணத்திற் சிறிதும் குறைந்ததாகாதென்று கற்றறிந்த வைத்தியர்களே கூறுகின்றனர். மேலும் சில வியாதிகளில் ஔஷதப்பிரயோகம் முதலியவை பயன்படாமற்போக இதுவே தகுந்த சிகித்ஸையாயிருந்ததாகவும் தெரியவருகின்றது.

இந்த சிகித்ஸாக்ரமமானது அநேகவகையான ஸ்நானங்களால் நிறைவேற்றப்படுகின்றது. ஸாதாரணமாக ஜலத்தில் அமிழ்ந்து ஸ்நானம் செய்வது மாத்திரமல்லாமல் 'சீகர ஸ்நானம்' என்றும் 'ஸேகஸ்நானம்' என்றும், 'பாஷ்பஸ்நானம்' என்றும், 'கடிஸ்நானம்' என்றும் இன்னும் பல வேறு ஸ்நானக்ரமங்களுமுண்டு. சீகர ஸ்நானம் (Shower Bath) என்பது, அநேகம் சிறுத்வாரங்களையுடைய ஒரு தகட்டை உயரத்தில் பிடித்துக்கொண்டு அதில் ஜலம் சேர்த்து மழைபோல் சொரிய அதன்கீழ் ஸ்நானம் செய்வது; அல்லது ஒரு உயரமான குழாயின் முகத்தில் பல த்வாரங்களுள்ள மூடியை யமைத்து அதிலிருந்து பல தாரைகளாகச் சொரியும் ஜலத்தில் ஸ்நானம் செய்வது. ஸேக ஸ்நானம் (Douche Bath) என்றால் ஜலத்தை ஏதேனும் கருவியின் மூலமாய் அல்லது வேறு வகையில் சரீரத்தின்மேல் தெளிப்பது. சரீரத்தின் மேற்புறத்திலேயோ, அல்லது பக்கவாட்டிலோ ஏதேனும் ஓர் அவயவத்தைக் குறிப்பிட்டு அரையங்குலம் [illegible]மாக அல்லது அதற்கு மேலான கனமுள்ள தாரை[யாக] வேகமாய் விழும்படி ஸேகம் செய்வதால் உண்டாகும் ஆனந்தமும் ஆரோக்கியமும் மிக விசேஷமானதாம். பாஷ்ப ஸ்நானம் (Vapour Bath) [என்பது] ஜலத்தை ஆவியாகச் செய்து [illegible] வியர்[illegible] அவயவத்தின் [illegible] சரீரம் முழுது[illegible] நன்கு [illegible]யுமாறு செய்வது. இப்பொழுது [illegible] ரோகங்களிலும் இவ்வித ஸ்நானம் செய்து [illegible] அப்பிணிகள் [illegible]டாகும் தன்மை [illegible] யுமென்பது அநேகம் [illegible] அறியப்பட்ட விஷயமே. கடிஸ்நானம் ([illegible] Bath) என்[illegible] புக்குக் கீழுள்ள அவயவங்களிலுண்டான, அல்லது சில ஸமயம் ஸர்வாங்கங்களிலுமுண்டான வியாதியைப் போக்குவதற்கு ஒரு தொட்டியில் குளிர்ந்த அல்லது உஷ்ணமான ஜலத்தைச் சேர்த்து, அதில் இடுப்புவரையில் அமரும்படி யுட்கார்ந்திருப்பதாம். ஒன்றிலும் தீராத [illegible] ஸம்பந்தமான வியாதிகளும், மலபந்தம், மற்றும் சில வாதரோகங்கள் முதலியவையும் கடிஸ்நானத்தால் குணமாயிருப்பதாய் நாம் அறிவோம். குளம், அல்லது நதி முதலியவற்றில் தினந்தோறும் நன்றாகத் தலையமர்ந்து சில நேரம் முழுகி வருவதாலேயே நாட்டுப்புறங்களிலுள்ள அநேகம் ஜனங்கள் ஆரோக்கியக் குறைவின்றி வாழ்கின்றனர் என்று தற்காலத்திய வைத்தியர்களும் அபிப்பிராயப்படுகின்றனர். உட்கார்ந்தவாறே மார்பு அல்லது கண்டம் வரையில் ஒருவித ஸ்நானம் (Sit Bath) செய்வதுண்டு. கரஸ்நானம் (Hand-Bath) என்றும், பாத ஸ்நானம் (Foot Bath) என்றும் வேறு சில ஸ்நானவகைகளும் அந்தந்த அவயவங்களைப்பற்றிய வியாதிகளின் பரி[ஹா]ரத்தின் பொருட்டு ஏற்பட்டிருக்கின்றன. விஷய மறிந்த வைத்தியர்கள் சில வேளை [illegible] ளியை இளஞ்சூடான ஜலத்தில் உட்கா[illegible] அதாவது கடிஸ்நானம் பண்ணச் செய்[illegible] சிரஸ்ஸிலும் முதுகு முதலான அவயவங்களி[illegible] மேலும் குளிர்ந்த ஜலத்தை ஊற்றுவது வழக்கம். சுத்தமான சல்லாத்துணிகளையும், சிறிது கனமான துப்ப[illegible]யையும் துண்டுகளாகச் செய்து குளிர்ந்த ஜலத்திலேயோ அல்லது உஷ்ணஜலத்திலேயோ நனைத்து ஜலம் பெருகப் பெருக சரீரத்தின்மேல் சுற்றுவதும் ஒருவித ஸ்நான முறையாம்; ஆனால் இவ்வைத்தியர்களில் பெரும்பான்மையோர் முதலில் ஈரத்துணியை சரீரத்தின் மேல் போட்டு அதன்மேல் உலர்ந்த வேறு துணிகளையும் போர்ப்பது வழக்கம்; உட்புறத்திலுள்ள

ஈரத்துணி சிறிது உலர்ந்துவிடுமானால், மீண்டும் அப்போதைக்கப்போது அத்துணியின்மேல் ஜலத்தைத் தெளிப்பார்கள். ஈரத்துணியைப் போர்க்கும் முறையானது இந்த சிகித்ஸாக்ரமத்தில் இன்றியமையாததோர் விசேஷ விஷயமென்பது இம்முறையைக் கையாளும் வைத்தியர்களின் கொள்கை. ஜலத்தைக்கொண்டு செய்யப்படும் இச்சிகித்ஸாமுறையானது நரம்பு மண்டலங்களைக் குளிரச்செய்து, சரீரதாதுக்களில் இடைவிடாமலுண்டாகும் தஹன வேலையை (Oxydaion) அதன் நிலைமையினும் அதிகரிக்கச் செய்யாமல், சரீரமுழுதுக்குமே ஒருவாறு குளிர்ச்சியைக் கொடுத்து தேஹ வலிமையை விசேஷிக்கச் செய்யும்.

THERAPEUTIC VALUE OF POTATO JUICE.

உருளைக்கிழங்கின் சாற்றுக்குள்ள ஔஷதத் தன்மை.

வெகு நாட்களுக்கு முன்னமே இந்தியாவில் தென்னிந்தியதேசங்களைத் தவிர மற்ற இடங்களிலும், பர்மாமுதலான இதர பிரதேசங்களிலுங்கூட உருளைக்கிழங்கானது உணவுப் பொருள்களில் சிறந்ததென்றும், வேண்டியவளவு அதைப் புஜித்து வந்தால் அநேகவிதமான வாதரோகங்கள் தடுக்கப்படுகின்றன வென்றும் ஸாதாரண ஜனங்களும் அறிந்திருந்தனர். ஆமவாதம் என்கிற கீல்வாயு ரோகத்தில் உருளைக்கிழங்கை விசேஷமாக உண்பதால் குணமுண்டாகுமென்றும் அநேக வைத்தியர்களுடைய கொள்கை. சென்ற ஏப்ரலில் [illegible] லான்ஸெட் (The Lancet) என்கிற பிரஸித்திபெற்ற வைத்தியப் பத்திரிகையில் டாக்டர் H. C. ஹோவார்ட் என்பவர் இக்கிழங்கின் சாற்றுக்குண்டான ஔஷத குணங்களைப் பற்றி எழுதியிருக்கும் சிறந்ததோர் வியாஸமானது உருளைக்கிழங்குக்கு மேற்கூறிய குணங்கள் அதிகமாயுண்டென்பதை யுறுதிப்படுத்துகின்றன. டாக்டர் ஹோவார்ட் என்பவர் செய்த ஆராய்ச்சியினால், உருளைக்கிழங்கை சமைக்காமலே, அதிலிருந்து சாறுபிழிந்து, அச்சாற்றை ஆமவாதம் முதலிய வாதஸம்பந்தமான வியாதிகளில் உபயோகிக்க, சூலப்ரசமநம் என்கிற குணம் * (Anodyne Properties) அதற்கு மிகுதியாயுண்டென்று விளங்கியதாக அவர் அறிவிக்கிறார். (வாதரோகங்களில் கீல்களிலும் மற்றும் வேறு அவயவங்களிலும் உண்டாகக்கூடிய வலியையும், வீக்கங்களிலுண்டாகும் வேதனையையும் நிவ்ருத்தி செய்யும் தன்மை சூலப்ரசமநம் எனப்படும்.) அதற்கு இவ்வித குணமுண்டென்று சொல்வதை ஒருவரும் ஆக்ஷேபிக்க முடியாதென்றும், இதன் சாற்றிலுள்ள ஒரு விதமான சாம்பலுப்பின் இனங்களே (Potassium salts) பிரதானமாய் வாதரோகங்களைப் பரிஹரிக்கும் தன்மையுடையன என்பதை எவரும் [illegible] அவர்,

* சூலப்ரசமநம் என்பது சரகஸம்ஹிதை ஸூத்ரஸ்தானத்தில் 4-வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பச்சைக்கிழங்கை இயந்திரத்திலிட்டுப் பிழிந்து அதிலுள்ள மாப்பொருளையும் (Starch), நாக்ய கரப்பொருளையும் (Nitrogenous matter) விலக்கி, அதன் சாற்றை மாத்திரம் எடுத்துக் காய்ச்சி, அது சிறிது சுண்டிய பிறகு சீக்கிரம் கெடாமலிருப்பதற்காக க்ளிஸரைன் என்கிற பாணியை அதில் சிறிதளவு சேர்த்து ஒருவித ஔஷதம் (Extractum solani liquidum) தயார் செய்தார். 10-பங்கு உருளைக் கிழங்கிலிருந்து 1-பங்கு திரவ ஸத்துவம் (Liquid extract) எடுக்கலாம். இப்பொழுது இதிலிருந்து அநேகவிதமான முறைகள் தயார் செய்யப்படுகின்றன; இந்த ஸத்துவத்துடன் கொழுப்பு சேர்த்து ஒருவித களிம்பும், எண்ணெய் சேர்த்து ஒருவித தைலமும், ஒருவகையான சீலையும் பக்குவம் செய்யப்படுகின்றன.

தீவிரமான சில ஸந்திவாத நோய்களிலும் (Acute synovitis), முழங்காலிலுண்டாகும் க்ரோஷ்டுக சீர்ஷம் அல்லது நரித் தலைவாயு என்கிற வாயுவிலும் மேற்கூறிய திரவ ஸத்துவம் சீக்கிரத்தில் வலியைப் போக்கத் தகுந்தது; அன்றியும் சில நாட்களுபயோகித்து வந்தால் கீல்களில் சேர்ந்துள்ள நீர்களை வற்றச் செய்து வீக்கத்தை அடியோடு போக்கிவிடும். கணுக்களிலுண்டாகும் சூலையும், கடிவாதம் (Lumbago) என்கிற வியாதியினாலுண்டாகும் வேதனையும் இவ்வௌஷதத்தை மேலுக்குபயோகிப்பதால் நிவ்ருத்தியாகும்; முதலில் வெந்நீர் அல்லது வேறு தவிடு முதலியவற்றால் ஒற்றிடம் கொடுத்து, பின்னர் உருளைக்கிழங்கின் ஸத்துவத்தை அதற்கு மூன்று அல்லது நான்கு மடங்கு வெந்நீரில் கலந்து, பஞ்சுத் துணியை (Lints) அதில் நனைத்து நோய் கொண்ட அவயவத்தின் மேல் அதைப் போர்த்து, மற்றொரு ஸாதாரண மெல்லிய வஸ்திரத்தினால் கட்டிவிடவேண்டும். இவ்விதம் செய்வதால் வெகு சீக்கிரத்தில் குணம் தெரியும். ஏதேனும் காரணத்தினால் நசுங்கிப்போன அவயவங்களுக்கும் இவ்வகையான சிகித்ஸையினால் விசேஷகுணம் உண்டாகின்றது; ஈயவெள்ளை, அபினி இவற்றைச் சேர்த்து செய்யப்படும் கிலேதமென்கிற (Lotion) ஔஷதத்தினால் கூட அவ்வளவு சீக்கிரத்தில் அவ்விதமான குணம் உண்டாவது அரிது. ஆமவாதத்தினாலுண்டாகும் வீக்கமும் வலியும் இதன் ஸத்துவம் சேர்ந்த தைலத்தை மேலுக்கு இரண்டு மூன்று முறை தேய்த்து வந்தால் உடனே நீங்கிவிடும். உருளைக்கிழங்கின் குணங்களைப் பற்றி விஷய விசாரத்திற் கைதேர்ந்த இதர வைத்தியர்களின் கொள்கை மற்றவிதத்தில் எவ்வாறாயினும், அக்கிழங்கின் சாறு மேற்கூறிய வியாதிகளைப் போக்குவதில் மிகவும் சிறந்ததென்று நன்கு விளங்குகிறது. வாதரோகங்களிலுண்டாகும் ஸஹிக்க முடியாத வலிகளை வெகு சீக்கிரத்தில் நிவ்ருத்தி செய்வது, அவயவங்களுடைய ஸந்திகளில் சேர்ந்துள்ள நீர்களைப் போக்கி வெகு நன்றாக வீக்கத்தை நிவ்ருத்தி செய்வது என்னும் இவ்விரண்டு குணங்கள் உருளைக்கிழங்கின் சாற்றுக்கிருப்பதை அவர் ஆராய்ந்தறிந்து, அதைப்பற்றி மிகவும் சிலாகித் தெழுதியிருக்கிறார்.

DRUGS AND MEDICINES.

ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

வெள்ளுள்ளி அல்லது வெள்ளைப்பூண்டு.

புதிதான வெள்ளுள்ளியையே எதற்கும் உபயோகப்படுத்த வேண்டும். கடைகளில் ஸாதாரணமாய் விற்கப்படும் உடைந்துபோன வெள்ளுள்ளிகளில் தகுந்த குணமிராது. குழந்தைகளுக்கு ஜ்வரத்துடன் கூடிய அல்லது ஜ்வரம் நிவ்ருத்தியான பின்னர் தொடர்ந்திருக்கும் இருமலையும், மார்ச்சளியையும் வெள்ளுள்ளியினால் அடியிற் கூறப்படுமாறு பக்குவம் செய்யப்படும் ஔஷதமுறை நன்றாக ஸ்வஸ்தம் செய்யும்:—

(1) நான்கு பலம் வெள்ளுள்ளியைச் சிறிது தண்ணீர் விட்டு நன்றாய் நசுக்கி, அதினின்றும் சாறு பிழிந்து, அச்சாற்றில் அதற்கு ஸமயெடை சுத்தமான சர்க்கரை சேர்த்துக் குழப்பினால் அது ஒருவித பாகு போலாகும். இப்பூண்டின் பாணியை குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டி யளவில் தினத்திற்கு 3 அல்லது 4 தடவை கொடுக்கலாம். வாலிபரும் வயது முதிர்ந்தவருங்கூட அதற்கு இருமடங்கு அளவில் தினத்திற்கு 4 அல்லது 5 தடவை. இதை உட்கொண்டு வந்தால் ஜலதோஷ முதலியவற்றால் வரும் இருமல் சாந்தமாகும். ச்வாஸ காஸரோகத்திலும் இதை உபயோகிப்பதால் நற்பயன் விளையும். (2) வெகு உக்கிரமான காதுவலிக்கு வெள்ளுள்ளிச் சாற்றில் நாலைந்து துளி காதினுள் விட்டால், சீக்கிரத்தில் அந்நோய் தீருவதுண்டு. (3) சில வியாதிகளில் சிறு நீர் இறங்காமல் தடைபட்டு அடிவயிறு உப்பி ஸங்கட முண்டாகும்பொழுது, வெள்ளுள்ளியைச் சிதைத்து ஜலம் விட்டுக் கிளறி நாபிக்குக் கீழ் வைத்துக் கட்டினால் சீக்கிரத்தில் நீர் தாராளமாயிறங்கத் துவக்கும். (4) ஜ்வரம், மஸூரிகை யென்னும் பெரியம்மை இவற்றைச் சார்ந்து பைத்தியப் புலம்பலுண்டானால் அதற்கும் மேற் கூறியபடி வெள்ளுள்ளியைச் சிதைத்து உள்ளங்கால்களிற் கட்டினால், பிணியாளி சிறிது தாபம் குறைந்து நித்திரை போவான். (5) வெள்ளுள்ளியைப் பாலில் சமையல் செய்து கட்டிகளின் மேலும், வித்ரதிகளின் மேலும், வேறு வீக்கங்கள் மேலும் வைத்துக் கட்டினால் அவை உடைந்தாவது கரைந்தாவது குணமாய் விடும்.

பில்வப்பழம்.

இந்தப் பழத்தை முன்னால் ஆங்கில வைத்தியர்களும் அதிகமாய் சில ரோகங்களில் உபயோகித்து வந்ததாய் தெரிய வருகிறது. தீராத வயிற்றுப் போக்கு, இரத்தக்கடுப்பு முதலியவைகளில் ஜ்வரமின்றியே பிணியாளி பலஹீனமாயிருக்கும் பொழுது இப்பழம் உபயோகிக்கக் கூடியதாயிருக்கிறது. நன்றாகக் கனிந்த பழத்திலுள்ளிருக்கும் சோற்றில் ஒரு பலமெடை எடுத்து இரண்டு மூன்று அவுன்ஸ் ஜலம் சேர்த்து நன்றாகக் குழைத்து சர்க்கரையும் சேர்த்து உட்கொள்ளக் கொடுக்கலாம். இவ்விதமே ஒரு தினத்திற்கு இரண்டு மூன்று வேளை கொடுக்கலாம். வயிற்றுக் கழித்தலும் மலபந்தமும் [illegible] உண்டாகிற வியாதியில் [illegible] தினந்தோறும் காலை [illegible] கொடுத்து வந்தால் குடலிலுண்டாகும் [illegible] கிரமப்படுத்தி வியாதியை குணப்படுத்தும். குழந்தைகளுக்கு உண்டாகும் தீராத அதிஸாரம், [illegible] முதலானவையும் வெகு ஸுலபமான [illegible] மருந்தால் நிவ்ருத்தியாகும். பெரியவர்களுக்குக் கொடுக்கப்படும் அளவினும் சிறு குழந்தைகளுக்கு நாலில் ஒரு பங்கு தான் கொடுக்கலாம்.

கீழ்நெல்லி.

சதுப்புள்ள எல்லா இடங்களிலும் இச்சிறிய செடி செழிப்பாக முளைத்திருக்கக் காணலாம். இதன் வேரும், இலைகளும், சிறு முளைகளும் ஔஷத முறைகளில் உபயோகிக்கப்படுவதுண்டு. கட்டிப்போன மூத்திரத்தை நன்றாக வெளிப்படுத்தவும், காயம் முதலியவற்றிலிருந்து அதிகமாகப் பெருகும் இரத்த ஓட்டத்தைத் தடுக்கவும், அதிஸாரத்தை நிவ்ருத்தி செய்யவும் இம்மூலிகைக்குள்ள குணம் மெச்சத்தக்கதாம். இச் செடியின் வேரையும் இலைகளையும் நிழலில் உலர்த்தி, சூர்ணம் செய்து வெந்நீரிற் கலந்து உபயோகிக்கலாம்; அல்லது இரண்டு பல மெடை [illegible] ந்த மூலிகையை ஓர் ஆழாக்கு ஜலத்திற் சேர்த்து நான்கில் ஒரு பங்காகக் காய்ச்சி [illegible] உட்கொள்ளலாம். இதனால் [illegible] உண்டாகும் மயக்கம் முதலியன [illegible]. [illegible] ஸ்வஸ்தம் செய்வதற்கு இதன் கஷாயத்தை மிக நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம். ஒரு பலம் வேரை ஓர் ஆழாக்குப் பசும்பால் விட்டு [illegible] ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் உட்கொண்டு வந்தால், சிறிது நாட்களில் [illegible] ஸ்வஸ்தம் செய்யும். இதைச் சேர்த்து குளிர்ச்சியான குணந் தரும் தைலம் பக்குவம் செய்யலாம்.

NOTES AND ITEMS OF INTEREST.

பலவகைக் குறிப்புகள்.

நாக்கின் சுவையறியுந் தன்மை.

நாக்கென்னும் இரஸநேத்ரியமானது மற்ற இந்த்ரியங்களைப் போலவே மிகவும் முக்கியமானது. இது நமது சரீர போஷணைக்கு இன்றியமையாத உணவுப் பொருட்களின் சுவைகளறிந்து மனதைய் ஆனந்தப்படுத்துகிறது; சரீரத்திற்கு உதவாத உணவுப்பொருட்களை விலக்கும்படியும் நமக்கு அறிவூட்டுகின்றது. [illegible] எச்சுவையையும் நாக்கின் எந்த பாகமும் உணரும்படி அந்த [illegible] அமைக்கப்படவில்லை. நாக்கின் மேல் முக்கியமான [illegible] ஸ்தானங்கள் உண்டு; அவற்றுள் ஒவ்வொன்றும் அதற்கான வொந்த சக்தியினால் ஒவ்வொரு சுவையை யறியக்கூடும். நாக்கின் முனையானது விசேஷமாய் காரம் உப்பு என்கிற சுவைகளை யறியக்கூடியது; மத்திய பாகமானது மதுரம் கசப்பு என்கிற சுவைகளையுணரும்; நாக்கின் இரு பக்கங்களிலும் மற்றச் சுவைகளையு மறியக்கூடிய சக்தி அமைந்திருக்கின்றது. நாக்கின் அடி அல்லது கீழ்ப்பாகமானது வெண்ணெய், நெய், மற்றும் கொழுப்புள்ள பதார்த்தங்களின் [illegible]யை யறிகின்றது. (ஹெல்த் அண்ட் ஹாப்பினெஸ்— Health and Happiness.)

பாம்புக்கடி சிகிச்சை.

கல்கத்தா வைத்திய கலாசாலையில் வெகு நிபுணரென்று சொல்லப்படும் டாக்டர் கன்னிங்ஹாம், F. R. S. என்பவர், அங்குள்ள ஒரு தோட்டக்காரனை சர்ப்பந்தீண்ட அவனுடைய கையில் மேற்புறத்தில் கட்டு கட்டி, கத்தியினால் கையை [illegible] ரணமாக்கி, அக்கையிலிருந்து இரத்தத்தை [illegible] பிழிந்து விடும்படி பக்கத்திலிருந்த மற்றொருவனிடம் சொல்லி, அவன் அவ்விதமே நசுக்கிப் பிழிந்த பிறகு, நரம்பும் [illegible] பிதுங்கித் தொங்கும்படியான அக்கையை [illegible] கார்பாலிக் ஆஸிட்டில் தோய்க்கச் சொல்லி, அவனுக்கு பிராந்தியையும் குடிக்கக் கொடுத்தாராம்; பிறகு அவன் அந்த நோயும் எரிதலும் ஸஹிக்க முடியாமல் வெகு நாள் ஜ்வரத்தோடு அவஸ்தைப்பட்டானாம். இவ்விதம் செய்ததால் அம்மனிதன் பிழைத்து [illegible]டானென்றும், [illegible]விஷம் இரத்தத்தில் அதிகமாய் ஸம்பந்தித்ததாகத் தெரியவில்லை யென்றும் அவர் பயோனியர் பத்திரிகையில் பெருமையுடன் எழுதியிருக்கிறார். கிராமங்களிலும் காடுகளிலும் திரிகிற [illegible]கள், பாம்புக் கடிகளுக்குக் கொந்து போட்டு இரத்தத்தை யிறக்கி உள்ளுக்கு ஏதோ பச்சிலையைக் கொடுத்து வெகு எளிதில் விஷத்தைப் போக்கும் விஷயத்தைப்பற்றி அவர்கள் எவ்வளவு கௌரவம் கொண்டாடவேண்டும்!

நீரிழிவு ரோக பரிசோதனை.

இவ்வருஷம் ஜூன்மீ 11உ இங்கிலாந்திலுள்ள ஸர் T. K. பௌலர், K. C. V. E. என்பவரிடமிருந்து சென்னைக் கவர்ன்மெண்டாருக்கு மதுமேஹமென்னும் நீரிழிவு ரோக ஆராய்ச்சி விஷயமாய் ஒரு கடிதம் வர, அக்கடிதம் கவர்ன்மெண்டாரால் சென்னை ஸர்ஜன் ஜனரலுக்கு அதைப்பற்றி பிரயத்தனம் செய்யும்படியாய் அனுப்பப்பட்டது. அதன் பேரில் ஸர்ஜன் ஜெனரலுடைய சிபார்சினால் இவ்வித ஆராய்ச்சிக்காக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் W. S. பேடர்ஸன் என்பவரை, அவருக்கு உதவியாகக்கீழ்உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கும், ஆராய்ச்சி சாலை, அதற்கு வேண்டிய உபகரணங்கள், வியாதி ஸம்பந்தமான பரீக்ஷைகளுக்கு வேண்டிய மற்றும் பல தளவாடங்கள் முதலியவற்றை யேற்படுத்துவதற்கு வேண்டிய விவரங்களையும் சீக்கிரத்தில் தெரியப்படுத்தும்படி கவர்ன்மெண்டார் கேட்டிருக்கிறார்கள். இக்காரியம்நடந்தேறுவதற்காக ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கின்றது. இக்கமிட்டிக்கு டாக்டர் பேடர் ஸன் தலைவராவர்; இக்கமிட்டியில் மிஸ்டர் S. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், B. A., B. L. அவர்கள் மூன்றாவது மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பிடாபுரம் ராஜா இதற்காக 50,000 ரூபா கவர்ன்மெண்டாரிடம் ஒப்புவித்திருக்கிறார். இராஜாவின் இவ்வித ஔதார்யத்தைக் கண்டு H. E. கவர்னர் மிகவும் மெச்சிக்கொண்டார்.

மலேரியா என்னும் விஷஜ்வரம்.

விஷமஜ்வரத்திற்குக் காரணமான தோஷங்களைக் கொசுக்கள் ஜனங்களிடம்பரவச்செய்கின்றன வென்று ஸித்தாந்தம் செய்தவர்களுள் ஸர் ரோனல்ட் ராஸ் என்பவர் முக்கியமானவர். பிறகு நகரங்களில் சாக்கடைகள், கக்கூசுகள், குப்பைத் தொட்டிகள் முதலியவை ஒவ்வொரு வீட்டிலும் ஏற்பட்டிருப்பதாலும், ஜனங்கள் நெருங்கி கூட்டங்கூட்டமாய் வஸிக்கவேண்டியிருப்பதாலும் அவ்விடங்களில் கொசுக்களுடைய பாதை அதிகமாயிருக்கிற தென்றும் ஆங்கில வைத்தியர்கள் அனைவரும் ஒரே மனதாய் பல பரிசோதனைகளைக் கொண்டு நிச்சயித்தார்கள். பிறகு கொசுக்

களைக் கொல்லுவதற்கு ஏதேதோ வழி தேடினார்கள். அப்பால் பொன் நிறமான மத்ஸ்யங்கள் கொசுக்களைச் சாப்பிட்டுவிடுமென்றும், அதற்காக அவ்வித மீன்களை ஸம்பாதித்துக் குளங்களில் விடவேண்டுமென்றும் தீர்த்தாரானம் செய்தார்கள். இப்பொழுது ஜன நெருக்கமுள்ள பட்டணவாஸங்களில் கொசுக்கள் சேருவதில்லையென்றும், கிராமாந்தரங்களில் கொசுக்கள் அதிகமாய் வளருமென்றும் வங்காளத்து ஸ்பெஷல் மலேரியலாபீஸரான டாக்டர் பென்ட்லே என்கிற ஒருவர் சொல்ல, ஸர் ரோனல்ட் ராஸும் அது வாஸ்தவமென்று அங்கீகரிக்கிறாராம். ஆங்கில வைத்தியர்களுடைய அபிப்பிராயங்களில் சில நமக்கு ஆச்சரியகரமாகத் தோற்றுகின்றன. இவ்வித விஷயங்களை ஆயுர்வேத வைத்தியர்கள் கூறுவராயின் அவை பரிஹஸிக்கக் கூடியவைகளாய்விடுகின்றன. வாதமாவது, பித்தமாவது அதெல்லாம் நம்பக் கூடியதல்லவென்று ஆங்கில வைத்தியர்கள் சொன்னால் அது வேதவாக்கியம். கொசு வேட்டையும், மீன்வேட்டையும், எலி வேட்டையும் ஜனங்களுக்கு ஆச்சரியமாகத் தோற்றவில்லை.

பட்டினி கிடந்து பிணியைப் போக்கல்.

பட்டினி கிடந்தால் பிணி தீருமென்று டாக்டர் ஒல்ட் பீல்டென்பவர் ஒரு பிரஸங்கம் செய்தார். பிணியைத் தீர்ப்பதற்கு பட்டினி கிடப்பது ஒரு பெரிய ஒளஷதமாகுமென்றும் வியாதிக்காரன் அதற்கு முன்னரியாக போஷிக்கப்பட்டவனாக இருந்தால் 3,4 நாள் சுத்தப்பட்டினியாயிருந்தாலும் கஷ்டம் தெரியாதென்றும், கொஞ்சம் தண்ணீர் மட்டும் அருந்திவந்தால் 20 நாள்வரைப் பட்டினி கிடந்தாலும் பாதகமில்லையென்றும் சொல்லுகிறார். இந்த வாடிக்கை இன்னும் தெலுங்கு ஜில்லாக்களில் அனுஷ்டானத்தில இருந்துவருகிறது. ஆனால் அவர்கள் அனுஷ்டிப்பது ஒரு முரட்டு வைத்தியமாயிருக்கிறது. பிணியாளி பசிதாஹமென அடித்துக்கொண்டாலும் 7 அல்லது 10,15,21 நாள் வரையில் லங்கணம் போட்டுவிடுகிறார்கள். இப்படிக் கண்மூடித்தனமாய் லங்கணம் போடுவதினால் சில ஸமயங்களில் மட்டும் நன்மை ஏற்படுகிறதே யொழிய அனேக ஸமயங்களில் கெடுதலே ஏற்படுகிறது. வைத்தியன் தேச தத்துவத்தை யறிந்து நடத்திவந்தாலுமிருந்தால் இப்போர்க்கொத்த கெடுதல்கள் விளையா. ஏகாதசி விரதமென்றும், ஸோமவார விரதமென்றும் நம் தேசத்தார்கள் பலன் தெரியாமல் பட்டினி கிடந்தபோதிலும், முன்னோர்கள் இதனால் உண்டாகும் நற்பயனைத் தெரிந்துகொண்டே இவ்வித லங்கணங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

I. M. S. பரீக்ஷையில் தேறிய இந்தியர்.

மிஸ்டர் T. சங்கர சாஸ்திரி என்பவர் சென்ற மாதம் 27ல் ஐ. எம். எஸ். என்கிற உயர்தர வைத்தியப் பரீக்ஷையில் தேறினார் என்றறிய நாம் ஸந்தோஷப்படுகிறோம். இவர் குண்டூரில் மிஸ்டர் T. பூர்ணய பந்துலு அவர்களின் மூத்த குமாரராவர். சென்னை மெடிகல் காலேஜில் எம். பி. ஸி. எம். என்கிற பரீக்ஷையில் தேறியபிறகு, மிகவும் உதாரகுணமுள்ள பிடாபுரம் ராஜா உதவிய 5,000 ரூபாய் ஸ்காலர்ஷிப்பைப் பெற்று, சென்ற வருஷம் [illegible] மாதம் லண்டன் நகரில் ஸெண்ட் பார்த்தோலோமியூஸ் வைத்திய சாலையிலும், மிடில் ஸெக்ஸ் வைத்தியசாலையிலும் வேலை செய்து இப்பரீக்ஷையில் தேறினார். ஆந்திர தேசத்தில் இப்பரீக்ஷையில் தேறியவர்களுள் மிஸ்டர் T. சங்கர சாஸ்திரி இரண்டாமவர் ஆவர்.

நமது இயற்கை இரஸாயநம்.

உலகத்தில் இரஸாயநம் என்றும், பல்யம் (tonics) என்றும் கூறப்பட்டு உபயோகிக்கப்படும் எந்த ஒளஷதமும் சிரிப்புக்கு ஸமானமாகாது; சிரிப்பு, அநேக ஸமயங்களில் அநேக அவயவங்களுக்குண்டான கோளாறுகளைப்போக்கி ஒழுங்காகச் செய்யக்கூடிய பிரபாவமுள்ளது; மனதுக்குண்டாகும் சிந்தைகளை யொழித்து அதைச் செழுமையுடன் கொழுக்கச் செய்யும்; இது நமது ஆயுளை அழியாமற் காக்கக்கூடியது; ஆரோக்கியத்தைஅபிவிருத்தி செய்யத் தகுந்தது; உள்ளக் களிப்பையுண்டாக்குந் தன்மையானது; காரியங்கள் நிறைவேறி வெற்றி பெறுவதற்கேற்றது; சுருங்கச் சொல்லில், சிரிப்பை, ஆநந்தத்துடன் நீடூழி வாழ்வதற்காகக் கடவுளின் அருளாலேற்பட்ட ஓர் ஒப்புயர்வற்ற வரனென்றே மதிக்கவேண்டும். எப்பொழுதும் சிரிக்குமியல்புடைய மனிதன் நீடித்த காலம் மனக்களிப்புடன் வாழ்வனென்பதில் ஸந்தேஹமில்லை. உ[illegible]ளுக்கு எவ்வித வியாபாரமிருந்த[illegible] றைச் சிரித்துக்கொண்டே செய்[illegible] செய்ததில் சிரமமென்பது தெ[illegible] யத்தையும் சிரித்துக்கொண்டே [illegible] லாம். உள்ளே கா[illegible] சயனத்தின்மேல் [illegible] உயரக் கிளப்புவது [illegible] றத்தையும் ஆரோக்கிய[illegible] றது. ஒவ்வொரு [illegible] ரோக்கியத்தில் ஓர் அம்[illegible] மென்று நிச்சயிக்கப்படுகிறது. [illegible] தையுடன் கழிக்கவேண்டாம்; ம[illegible] கொண்டே களிப்புடன் [illegible]

(ஹெல்த் அண்ட் ஹாப்பினெஸ்.)